# உதயன்

விலை ரூபா 7.00

16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 16 புதன்கிழமை (01-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:248


## ர்வஜன வாக்கெடுப்பு அறிவிப்பைக் கண்டித்து
# கொழும்பில் பல்கலைக்கழக மாணவர் அரசுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.1

நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து வஜன வாக்கெடுப்பு நடத்தும் அர ன் திட்டத்தைக் கண்டித்து பல் லைக்கழக மாணவர்கள் கொழும் க் கோட்டை ரயில் நிலையத்துக்கு ன்பாக நேற்றுக் காலை 10 மணி ளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் கள் பங்குபற்றிய இந்த ஆர்ப்பாட்டத் திற்கான ஏற்பாடுகளை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செய்திருந்தது.

சுலோக அட்டைகளைத் தாங்கி யவாறு அவர்கள் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாண வர்களும் இணைந்து சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக மேற்கொள்ளவிருக்கும் போராட்டங்களில் ஓர் அங்கமாகவே நேற்றைய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களை கொழும்புக்கு வெளியே சகல நகரங்களில் நடத்தவும் -

சர்வஜன வாக்கெடுப்புத் தினமான ஓகஸ்ட் 21 ஆம் திகதி வகுப்புக்களைப் பகிஷ்கரித்து பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் - அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக சுவரொட்டிப் போராட்டத்தை நடத்தவும் மாணவர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இதேவேளை -

நாட்டின் பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் தீர்க்காமல் எதேச்சாதிகார அடிப்படையில் தீர்க்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினால் ஜனநாயகம் சீர்குலைந்து போயுள்ளது. இதனால் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்புக்கு எதிராகவும் போலியான சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராகவும் நேற்றைய ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக அனைத்து மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சமீர கொஸ்வத்த தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டங்களுக்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் பூரண ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (க-3)



கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

# நாடாளுமன்றை முற்றாக ஒதுக்கிவிட்டு புதிய அரசமைப்பை ஏற்படுத்த முயற்சி!

## பெரும்பான்மையை இழந்து விட்டதால் றுக்கு வழியை நாடுகிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஓகஸ்ட் 1

**நாடாளுமன்றத்தில் தனது அரசுக்கான பெரும்பான்மை ஆதரவை ந்துவிட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாடாளுமன்றை முற்றாக க்கித் தள்ளிவிட்டு புதிய அரசமைப்பை நடைமுறைக்குக் கொண்டு ம் திட்டத்தில் முனைப்பாகச் செயற்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கின்றன.**

ற்போது செப்ரெம்பர் 7 ஆம் வரை ஒத்திவைக்கப்பட்டிருக் நாடாளுமன்றத்தை மீண்டும் க்கும் எண்ணம் சந்திரிகா அர இல்லையென்று கூறப்படுகின்

ஓகஸ்ட் 21 ஆம் திகதி நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கான மக்கள் ஆணை தமக்குக் கிடைத்துள்ளது என்று அறிவிப்பதும் -

அதனடிப்படையில் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைப்பதும் -

ஜனாதிபதியின் திட்டம் என்று கூறப்படுகின்றது.

எது எப்படி என்றாலும், தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் -

பொதுத் தேர்தல் முடிந்து ஒரு வருடம் கழியாததால் எதிர்வரும் செப்ரெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தற்போதைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியாது.

அது போல, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாமல் இப்போதைய அரசமைப்பை மாற்றியமைக்க முடியாது.

ஆனால் -

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் எனக்கு ஆணை தந்துள்ளார்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திய அரசமைப்பை உருவாக்குவதற்கு ளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனை

### ஜதந்திரிகள் மத்தியில் ஜனாதிபதி

கொழும்பு,ஓக.1

திய அரசமைப்பை உருவாக்கு தொடர்பான ஆலோசனைகளை ன், ஐரோப்பா, வட அமெரிக்கா நாடுகளின் சட்ட நிபுணர்களி பெற்றுள்ளோம் என்று ஜனாதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்

வெளிநாட்டு ராஜதந்திரிகள மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஜனாதிபதி தனது உரையில் மேலும் கூறியதாவது:-

தற்போதுள்ள நிலையில் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது. எனவே யுத்தத்தை நிறுத்தி அமைதியை நிலைநாட்டுவதற்காக சகல

(14 ஆம் பக்கம் பார்க்க)

### னாதிபதியுடனான நேற்றைய சந்திப்பில்

## அரசுக்கு ஆதரவு வழங்க ஜே.வி.பியின் நிபந்தனை

கொழும்பு,ஓக.1

ர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் த்தைக் கைவிட்டு, நாடாளுமன் தைக் கூட்ட அரசு முடிவு செய் , நாட்டின் நலன் கருதி எடுக் முயற்சிகளுக்கு ஜே.வி.பி. ஆத வழங்கும் என்று அந்தக் கட்சியின் தூதுக்குழு ஜனாதிபதிக்கு உறுதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நண்பகல் ஜே.வி.பி தூதுக் குழுவுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே

(14 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

மன்னார்,ஓக.1

மன்னார் உயிலங்குளம் பொலிஸ நிலையத்தில் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவில் கடமை புரிந்துவந்த உதுமாலெப்பை மன்சூர் என்ற பொலீஸ் கான்ஸ்டபிள் நேற்றுக் காலை 10 மணியளவில் பிஸ்டல் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மன்னாரில் பொருள்களைக் கொள்வனவு செய்த பின்னர் இவர் நகரின் புறநகர் பகுதிக்குச் சென்ற சமயமே சுடப்பட்டார் எனக் கூறப்பட்டது. (க-3)

## வெலிக்கந்த பகுதியில் அதிரடி; ஐந்து ஊர்காவலர்கள் பலி!

கொழும்பு,ஓக.1

மட்டக்களப்பு - பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லையிலுள்ள வெலிக்கந்த நாகஸ்தன்ன கிராமத்தில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு வழங்கச் சென்ற ஊர்காவலர்கள் மீது நேற்றுக்காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஐவர் உயிரிழந்தனர்.

மகாவலி 'சி' வலயத்தில் அமைந்துள்ள நாகாஸ்தன்ன கிராமத்தில் வாழும் 242 குடும்பங்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு பொலீஸாரும் ஊர்காவலர்களும் பாதுகாப்பு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திவ்வியன் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்

### ஆயுதத் தளபாடங்களும் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்ட சமயம் அவரிடம் இருந்து கைப்பற்றியதாகத் தெரிவித்து ஒரு தொகுதி ஆயுத தளபாடங்களை காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலீஸார் நேற்று யாழ்.நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

திவ்வியன் தொடர்பான வழக்கு நேற்று பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயமே இந்த ஆயுத தளபாடங்கள் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தன.

இலக்கம் இல்லாத ரி-81ரக துப்பாக்கி - ஒன்று, அதற்குரிய மகஸின் 20, 4S ரக சிறிய பிஸ்டல் ரவைகள் - 30, 7.62X39 ரக ரவைகள் - 82, குழாய் வடிவிலான குண்டு - ஒன்று, ஆயுதம் வைக்கும் 'ஸ்ராண்ட்'- ஒன்று ஆகியவையே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டனவாகும்.

இவற்றில குழாய் வடிவிலான குண்டு வெடிக்கக்கூடிய நிலையில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் ஆஸ்பத்திரியில் சுட்டுக்கொலை

### திருமலையில் இரவுவேளை சம்பவம்

கொழும்பு,ஓக.1

திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) அமைப்பைச் சேர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஆம் திகதி செல்வநாயகபுரவில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த சிவா என்ற அந்த நபர் திருகோணமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் தெற்கு காந்திநூபன் சனசமூக நிலையத்தை பு மைப்பதற்கு ரூபா மூன்று லட்சத்தை ஒதுக்கீடு செய்து அதில் ரூபா ஒன்றரை லட்சத்தை உடன் தந்து உதவியமைக்கும், எமது கிராமத்திற்கு குடிதண்ணீர் வசதியைச் செய்து தந்தமைக்கும்



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு – கிழக்கு
தமிழ் விவகாரம், இந்துசமய கலாசார
அமைச்சரும்
ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான
மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம
அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான
கௌரவ
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்



**திரு.க.கமலசேகரன் (பாபு)**
அவர்களையும்
நன்றியுடன் பாராட்டி வாழ்துகின்றோம்.

தலைவர்
சி.சௌந்தராஜன்
நிர்வாகம்

சுன்னாகம் தெற்கு

(90696)



உ

*வெள்ளோட்டம் என்பதோர்*
*வெற்றிக் களிப்பதும்*
*உள்நோக்கங் கொண்ட உபகாரம் – வள்ளம் தேர்*
*வாகனங்கள், சப்பறங்கள் வடிவமைக்கும்*
*சிற்பிகளின் சாகசத்தை போற்றும் செயல்.*

வேலணை பெருங்குளம
அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய
**புதிய சப்பற வெள்ளோட்ட விழா**

அம்பிகையின் சப்பறத்தை அழகுற வடிவமைத்த
சிற்ப ஆச்சாரியர்கள்
திரு.நடராசா சிவபாலன் (கோணேஸ் - காரைநகர்)
நவாலி மகேசன் வீதி, மானிப்பாய்.
திரு.சின்னத்துரை நந்தகுமார்
(புளியங்கூடல் - சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.)
இவர்களை அன்புடன் வாழ்த்தி
நன்றி கூறுபவர்கள்:

*வேலணை*
சப்பறத் திருப்பணிச் சபையினரும்,
உபயகாரர்களும்

(C/17650)



நன்றியுடன்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலய புனரமைப்பு திருப்பணிக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்துதவியமைக்காக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் மொழி விவகாரங்கள் அமுலாக்கல் இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமுமான மாண்புமிகு கௌரவ அமைச்சர்,

K.N. டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கும்



யாழ். மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்
**கே.வி.குகேந்திரன் அவர்களுக்கும்**



அத்துடன் இந் நிதி ஒதுக்கீட்டுக்கு உறுதுணையாக இருந்த வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தலைவரும் ஈ. பி. டி. பி மானிப்பாய் தொகுதி அமைப்பாளருமான,
**திரு.வெ.அன்ரன் ஜோன்சன் J.P.U.M**
அவர்களையும்



நன்றியுடன் பாராட்டி எல்லாம் வல்ல
ஐயப்பசுவாமியின் அருளாட்சி
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வடலியடைப்பு
பாரத்தனை ஐயனார் ஆலய
பரிபாலன சபை.

(C/17648)


## நெல்லியடி மாணவரையும் காணவில்லை

யாழ்ப்பாணம்,ஒக.1

நெல்லியடிப் பகுதி பாடசாலை மாணவர் ஒருவரைக் காணவில்லை என அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த வல்லிபுரநாதன் பிரகலாதன் (வயது17) என்பவரே காணாமற் போனவராவார்.

கடந்த 22ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று அந்த முறைப பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த, தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவனான தயாளன் துஷ்யந்தன் என்பவரும் இதே தினத்தில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்று திரும்பி வரவில்லை என்று ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது. (க-10)

## மண்டைதீவு பங்குமக்களின் திருப்பலி

மண்டைதீவு சம்பேதுருவானவர் ஆலய பங்குமக்கள் கடந்த 11 வருடகாலமாகத் தமது ஆலயத்தில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்க அனுமதி மறுக்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து -

குருநகர் கடற்கரை வீதியில் உள்ள சம்பேதுருவானவர் சிற்றாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கு மக்களுடன் இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக் கொடுக்கவுள்ளனர்.

1990ஆம் ஆண்டு மண்டைதீவில் இருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்த பின்னர் இன்றுவரை இந்த ஆலயத்துக்கு பொதுமக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

## சத்துணவுத் திட்டம் இன்று ஆரம்பம்

தென்மராட்சி,ஒக.1

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு இலவச சத்துணவு வழங்கும் திட்டம் இன்று தொடக்கம் தென்மராட்சி வலய பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சத்துணவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் இயங்கும் கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

நிகழ்வில் தென்மராட்சி, பளை ஆகிய பிரதேச செயலர்கள் சாவகச்சேரி, பளை ஆகிய பிரதேச சபை, சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றின் தலைவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

(க-117)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக.1

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின் முன்பள்ளி ஆசிரியர்களையும் -

சனிக்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி, சங்கானை, தெல்லிப்பழை மற்றும் தீவகம் பிரதேச செயலர் பிரிவின் முன்பள்ளி ஆசிரியர்களையும் பகல் ஒரு மணிக்கு ஈ.பி.டி.பியின் காரியாலயத்துக்கு வருகை தருமாறு முன்பள்ளி ஆசிரியர் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-10)

## களப்பலி

யாழ்ப்பாணம்,ஒக.1

மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் தமது உறுப்பினரான மேஜர் பற்றிக் அல்லது சத்தியசீலன் (சந்தனம் நேசகுமார் - கேகாலை) என்பவர் களப்பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(க-9)


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

உடுவில் மேற்கைச் சேர்ந்தவர்களான
சுரேஷ் - ஜெயந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வன்




**செல்வன் அபர்ணன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (01-08-2001) புதன் கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அபர்ணனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா - வெல்லவராயன் (கொழும்பு), அப்பம்மா - தங்கரத்தினம், அம்மப்பா - செல்லத்துரை, அம்மம்மா - கனகம்மா, சித்தப்பாமார்களான றமேஷ் (அமெரிக்கா), றதீஸ், அத்தைமார்களான சுகந்தி, சுபா (கொழும்பு), பெரியப்பா - பாஸ்கரன், பெரிய அன்ரி - வசந்தி, அண்ணாமார்கள் டினோசாந், கிசாந், அக்கா நிருஜா, ஆசைமாமா ஜெயக்குமார், சாந்தி மாமி, மச்சான் சயந்தன், மச்சாள் விதுசனா (கொழும்பு) ஆகியோர் மயூராபதி அம்பாள் அருள்பெற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

அன்பு அப்பா
V.சுரேஷ்

*உடுவில்*

(90688)



**கலைப்பீட இறுதிவருடப் பொதுக்கலை மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்**

*காலம்:-* 02-08-2001 (வியாழன்)
*நேரம்:-* மு.ப 10.30 மணி.
*இடம்:-* வர்த்தகத்துறை மண்டபம்

*அனைவரும் தவறாது சமுகம் தரவும்.*

யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி

(90697)

பிரதிநிதி.



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26
௦
07
௦
1930



உதிர்வு
25
௦
07
௦
1999

**வல்லி பொன்னுத்துரை** (பொன்னர்)
திதி: 01.08.2001
ஆண்டு இரண்டு ஆகினாலும்
உங்கள் நினைவு மாறாது ஐயா!

*109/2,சிவன் புதுவீதி,*
*நல்லூர்.*

(C/17664)

தகவல்:
J.ரஞ்சினி (மகள்)



## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

வையத்துள்
அறிமுகம்
19
-
10
-
1935



தெய்வத்துள்
சங்கமம்
08
-
08
-
1995

**அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா**
திதி: 01.08.2001

பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த எம்
தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஆறு ஆண்டு அல்ல ஆறாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றும் மாறாதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

*சந்தையடி,*
*மானிப்பாய்.*

மனைவி, மைத்துனர்கள்,
சகோதரிகள், மைத்துனிகள், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(90662)



தெற்குப் போலாந்தில், தொடர்ந்து பெய்துவரும் அடைமழை மற்றும் புயற்காற்றால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பொங்கிப்பாயும் ஆறுகள் கரைகளை உடைத்து ஊர்களுக்குள் புகுந்தன. இந்த வெள்ளத்துக்கு இதுவரை 25 பேர் பலியாகியதுடன் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

நெஞ்சளவு வெள்ளத்தின் மத்தியில், பாதுகாப்பான இடத்துக்குச் செல்பவரையும், படகுகள் மூலம் வளர்ப்பு விலங்குகளும், மனிதர்களும் காப்பாற்றப்படுவதையும் மணற் பைகளைப் போட்டு வெள்ளத்தைத் தடுக்க முயலும் பெண்மணியையும், வெள்ளச் சேதத்தின் மத்தியிலும் பாண் கிடைத்த மகிழ்ச்சியில் செல்பவரையும், படங்களில்

## இந்தோனேசியாவில் 60களில் நடந்த கம்யூனிஸ்டுகள் படுகொலைகள் பற்றிய நூலுக்கு அதிபர் புஷ் தடை விதிப்பு

வாஷிங்ரன்,ஓக.1

இந்தோனேசியாவுக்கும் அமெரிகாவுக்கும் இடையே 1965-66 காலப் பகுதியில் நிலவிய ராஜரீக உறவுகள் குறித்த விவரங்கள் அடங்கிய புத்தகமொன்றின் விற்பனையை புஷ் நிர்வாகம் தடைசெய்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட இந்தப் புத்தகத்தில்,

1965-66இல் இந்தோனேசியாவில் எதிர்க்கட்சியாகவிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்கள் குறித்த விவரங்களை, அமெரிக்கத் தூதரக அதிகாரிகளே அப்போதைய இந்தோனேசிய அரசின் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கியதாகவும்-

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கொல்லப்பட அதுவே காரணமாக இருந்ததாகவும் - குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அப்போது இந்தோனேசியாவிற்கான அமெரிக்கத் தூதர் மார்வுல் கிறீன், கம்யூனிஸ்ட்டுகள் மீதான அடக்கு முறைகளை முன்னெடுப்பதற்கு பல மில்லியன் டொலர்களை நிதியுதவியாக இந்தோனேசிய அரசுக்கு வழங்கியதாகவும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1960களின் நடுப்பகுதியில் புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி சுகர்னோவின் மகளான மேகவதி இந்தோனேசிய அதிபராகப் பதவி யேற்றுள்ள இந்தச்சமயத்தில், இந்த விவரங்கள் வெளியிடப்படுவதை அமெரிக்க அதிபர் விரும்பவில்லை என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஓ)

உலக அரங்கில்

## மஸிடோனியத் தலைநகரில் தேசியவாதிகள் ஆர்ப்பாட்டம்

ஸ்கொப்ஜே,ஓக.1

மஸிடோனியத் தலைநகர் ஸ்கொப்ஜேயில் கடந்த சனிக்கிழமை ஒன்றுதிரண்ட தேசியவாதிகள், அல்பேனியத் தீவிரவாதிகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்.

அல்பேனியத் தீவிரவாதிகளுடன் மஸிடோனிய அரசு பேச்சு நடத்துவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மஸிடோனிய நாடாளுமன்றத்தை நோக்கிச் சென்ற பேரணியின் முடிவில், அங்குள்ள மைதானத்தில் கூடி, மஸிடோனியத் தேசியகீதத்தைப் பாடிய பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

கடந்த வார ஆரம்பத்தில் மஸிடோனியத் தேசியவாதிகள் நடத்திய ஊர்வலத்தின் போது, மஸிடோனியாவுக்கான ஜேர்மன் மற்றும் அமெரிக்கத தூதரகங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகின.

அல்பேனியர்கள் அதிகம் வாழும் பகுதிகளைக் கொசோவாவுடன் இணைக்க வேண்டுமென்று கோரிப் போராடும் அல்பேனியத் தீவிரவாதிகளுக்கு மேற்குலக நாடுகள் ஆதரவாகச் செயற்படுவதாகக் கூறியே, இந்தத் தூதரகங்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஓ)

## ஸ்டாலினின் முறைப்பாடு குறித்து மனித உரிமை ஆணையம் விசாரணை

சென்னை மேயர் மு.க.ஸ்டாலினின் வீட்டில் இருந்த பெண்களிடம், தமிழகப் பொலீஸார் அத்துமீறி நடந்துகொண்டார்களா என்பது குறித்த விசாரணையை மாநில மனித உரிமைகள் ஆணையம் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் தொடங்குகிறது.

முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி கைதுசெய்யப்பட்ட சமயத்தில், வேளச்சேரியில் உள்ள தனது வீட்டுக்குச் சென்ற பொலீஸார் - தான் பெங்களூர் சென்றிருந்த அந்தச் சமயத்தில் - வீட்டிலிருந்த பெண்களிடம் அத்துமீறி நடந்ததாக மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் மேயர் மு.க. ஸ்டாலின் முறைப்பாடு செய்திருந்தார்.

கருணாநிதி கைது தொடர்பான விவகாரங்கள் குறித்து விசாரிக்க மாநில அரசு ஆணைக்குழு ஒன்றை அமைத்திருப்பதால், மனித உரிமைகள் ஆணையம் ஸ்டாலினின் முறைபாடு குறித்து விசாரிக்கக் கூடாது என்று தமிழக உள்துறை அமைச்சர் மற்றும் மாநிலப் பொலீஸ்மா அதிபர் ஆகியோர் கோரியிருந்தனர்.

ஆனால் இந்த வாதத்தை நிராகரித்த ஆணையம், மேயர் ஸ்டாலினின் முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளது. (ஓ-9)

## பதவியைவிட்டு விலக விரும்புவதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு



புதுடில்லி,ஓக.1

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பதவி விலக விரும்புவதாகத் தெரிவித்தார். நேற்றுக்காலை புதுடில்லியில் நடந்த நாடாளுமன்ற பா.ஜ.க. உறுப்பினர்கள் கூட்டத்தில் இதனை அவர் கூறினார்.

ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி இசைவான முறையில் கூட்டணியை செயற்பட வைக்க முடியாததாலேயே தான் இந்த முடிவை எடுத்துள்ளதாக வாஜபாய் அப்போது தெரிவித்தார்.

இந்த யோசனையைக் கைவிடுமாறு மூத்த பா.ஜ.க. தலைவர்கள் பிரதமரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகிய பா.ம.க. மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் மீண்டும் இணைய விரும்புகின்ற போதும் - வாஜ்பாய் அதனை வரவேற்றுள்ள நிலையிலும் - மற்றைய கட்சிகள் எதிர்ப்பதால் பா.ம. கவும், திரிணாமுல் காங்கிரஸும் கூட்டணியில் இணையமுடியாத நிலை தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## ஈராக்கிய இராணுவத்தின் திறன் குறித்து அஞ்சுகிறது அமெரிக்கா

பாக்தாத்,ஓக.1

ஈராக்கின் விமான எதிர்ப்புத் தாக்குதல்திறமை வியக்கவைக்குமளவுக்கு வளர்ந்திருப்பது, அமெரிக்காவுக்கு கவலையளித்துள்ளதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீஸா ரைஸ் கூறியுள்ளார்.

கடந்தவாரம் ஈராக்கிய வான்பரப்பில் அதிக உயரத்தில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க உளவு விமானம் ஒன்று, ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து மயிரிழையில் தப்பியதாக அமெரிக்கா தெரிவித்தது.

சர்வதேசப் பாதுகாப்புக்கும், அமெரிக்காவுக்கும், ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் தீராத தொல்லையாகவும், அச்சுறுத்தலாகவும் உள்ளதாக அமெரிக்க அதிபர் புஷ் கூறியிருந்தார்.

ஆனால் இவற்றை நிராகரித்த அதிபர் சதாம், ஈராக்மீது தாக்குதல் நடத்த, அமெரிக்கா கூறும் போலிக் காரணமே உளவு விமானம் மீதான தாக்குதல் விவகாரம் என்று கூறினார்.

1981ஆம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் பின்னர், ஈராக்கின் வான் பகுதியை சூனியப் பிரதேசமாக ஐநா அறிவித்தது. இப்பகுதியில், வான்கலங்கள் எதையும் பறக்கவிட ஈராக்குக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் தடையைக் கண்காணித்து வருகின்றன. இந்த விமானங்களுக்கு எதிராக விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும், ஏவுகணைகளையும் ஈராக் பயன்படுத்தியபோதும், இதுவரை அந்த விமானங்களுக்கு சேதமேற்படுத்த ஈராக்கால் முடியவில்லை.

ஆனால் ஈராக்கிய விமான எதிர்ப்புத் தளங்கள், அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களின் குண்டுவீச்சுகளுக்கு இலக்காகிச் சேதமடைந்துள்ளன.(ஓ)

## பூலான்தேவி கொலை தொடர்பாக மேலும் மூன்று பேர் கைதாகினர்

புதுடில்லி,ஓக.1

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் பூலான்தேவி கொலை தொடர்பாக மேலும் 3பேரை டில்லிப் பொலீஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். ரவீந்தர்சிங், சேகர்ராணா, ரஜ்னீர் என்ற அந்த 3 பேரும் உத்தரப் பிரதேச மாநிலம் ஜேகான் பூரில் உள்ள நீதிமன்றத்தில் சரணடைய முயற்சித்ததாகவும் -

ஆனால், பூலான்தேவி கொலை வழக்கு தனது அதிகாரவரம்பிற்குள் வாராததால், நீதிபதி அவர்களது சரண் கோரிக்கையை நிராகரித்ததாகவும் -

பின்னர் 3பேரும் நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்த போது கைது செய்யப்பட்டதாகவும் -

டில்லிப் பொலீஸார் தெரிவித்தனர்.

பூலான்தேவி கொல்லப்பட்டது தொடர்பாக இதுவரை 4பேர் கைது செய்யப்பட்டு, பல் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்ட போதும், கொலைக்கான காரணம் இன்னமும் மர்மமாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

## ஈரான், லிபியா மீதான தடை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிப்பு

வாஷிங்கரன்,ஓக.1

ஈரான் மற்றும் லிபியா மீதான தடையை மேலும் 5 வருடங்களுக்கு நீடிக்க அமெரிக்க செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்த இரு நாடுகளிலும் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தித் துறைகளில் வெளிநாட்டு முதலீடுகள் இடம்பெறுவதை இதன் மூலம் மேலும் 5 ஆண்டுகளுக்கு அமெரிக்கா தடை செய்துள்ளது.

இதனால் 20 மில்லியன் டொலருக்கு அதிகமான பணம் வெளிநாடுகளிலிருந்து ஈரானில் அல்லது லிபியாவில் முதலிடப்படுவதை அமெரிக்கா தடுத்துள்ளது.

5 வருட காலத் தடைக்கு செனட் அங்கீகாரம் அளித்துள்ள போதிலும் 18 மாதகாலத்தில் அதனை மீள் பரிசீலனை செய்ய முடியும் எனவும் அது தெரிவித்துள்ளது.

ஈரானும் லிபியாவும் பயங்கரவாதத்துக்கு உதவி புரிகிறதென குற்றம் சாட்டப்பட்டு 1996இல் இவ்விரு நாடுகள் மீதும் தடை கொண்டுவரப்பட்டது. அத்தடை அடுத்த மாதத்துடன் காலவதியாகின்றது.

அமெரிக்காவின் இந்தச் செயலை ஈரானும் லிபியாவும் கடுமையாகக் கண்டித்துள்ளன.

### தைவானில் சூறாவளிக்கு 46பேர் பலி!

தைபே,ஓக.1

தைவானில் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் நேற்று முன்தினம் வீசிய சூறாவளியில் குறைந்தது 46பேர் இறந்துள்ளனர்; 150 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சூறாவளியால் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாதவாறு மோசமான மண்சரிவுகளும் வெள்ளமும் ஏற்பட்டுள்ளன.

(ஓ)

## இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் இரகசியங்கள் 'இன்டர்நெட்டில்' அம்பலம்

புதுடில்லி,ஓக.1

இந்திய வெளியுறவுத்துறையின் கணனிகளில் சேமிக்கப்பட்டிருந்த இரகசியத் தகவல்களைக் கொண்ட கோப்புகள் இணையத்தளங்களில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. கணனிகளில் பரவிய 'சர்கேம்' என்ற வைரஸாலேயே இது நிகழ்ந்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜுலை மாதம் 18ஆம் திகதி அளவில் கணனிகள் 'சர்கேம்' வைரஸால் பாதிக்கப்படலாம் என்று கணனியியல் நிபுணர்கள் ஏற்கனவே எச்சரித்திருந்தனர்.

இந்த எச்சரிக்கை விடப்பட்டு 6 நாள்கள் கழித்தே, இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் கணனிகளில் 'சர்கேம்' வைரஸ் பரவியிருப்பது இந்திய அதிகாரிகளுக்குத் தெரியவந்துள்ளது.

ஆனால், அதற்குள் வெளியுறவு அமைச்சக அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்ட மெமோக்கள் உட்பட இரகசியத் தகவல்கள் பலவும் அமெரிக்கா முதல் சிங்கப்பூர் வரையிலான இணையத்தளங்களில் பரவிவிட்டன.

கணனிகளில் சேமிக்கப்பட்டுள்ள கோப்புகளை, ஒளிவு மறைவின்றி இணையத்தளங்களில் பரப்பிவிடும் 'சர்கேம்' வைரஸின் வேலையே இது என்று கண்டுபிடிக்கப்பட்டபோது, விடயம் கைமீறிப் போயிருந்தது.

'சர்கேம்' வைரஸை 'சிமென்டக்' என்ற 'புறோகிராம்' மூலம் எளிதில் நீக்கிவிடும் வாய்ப்பு உள்ளபோதும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் வெளியுறவு அமைச்சகக் கணனிகள் அனைத்திலும் 'சர்கேம்' வைரஸ் முற்றாக அகற்றப்படாவிட்டால், கணனிகள் உள்ள கோப்புகளை வைரஸ் அழித்துவிடும் அபாயம் உள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சகக கணனிகள் முன்னரும் ஒருமுறை 'மெஜிஸ்டர்' என்ற வைரஸால் பாதிக்கப்பட்டன. ஆனாலும் இந்திய அரசு வைரஸ்களிலிருந்து தனது கணனிகளையும் இணையத்தளங்களையும் பாதுகாக்க எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. (ஓ)

### கணனி வைரஸ் குறித்து எச்சரிக்கை

உலகில் உள்ள கணனிகளை நேற்றுமுதல் 'கோல்ட்ரெட்' என்ற வைரஸ் தாக்கக்கூடும் என்று அமெரிக்க அரசும், கணனி உற்பத்தி நிறுவனமான 'மைக்ரோ சொவ்ட்'டும், எச்சரித்துள்ளன.

இந்த வைரஸ் இணையத்தள நடவடிக்கைகளை சீர்குலைக்கும் தன்மை[illegible] என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## இளைஞர்கள் துரத்தியதால்
# அபகரித்த மோ. சைக்கிளை கைவிட்டு ஓடிய திருடன்!

வலி.வடக்கு, ஒக. 1

மோட்டார் சைக்கிள் திருடிய நபர் ஒருவர் இளைஞர்களினால் துரத்தப்பட்ட போது திருடிய மோட்டார் சைக்கிளை கைவிட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

நேற்று முன்தினம் மல்லாகம் பகுதியில் இலக்கமில்லாத மோட்டார் சைக்கிளில் வந்த நபரே இளைஞர்கள் மறித்ததும் மோட்டார் சைக்கிளை கைவிட்டுத் தப்பியுள்ளார்.

அவர் ஓட்டிவந்த நீலநிறமுடைய கொன்டா சி—90 மோட்டார் சைக்கிள் இளைஞர்களினால் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் சம்பந்தமான விவரங்கள் தெரிந்தவர்கள் அல்லது சொந்தக்காரர் தன்னுடன் தொடர்பு கொள்ளும்மாறு சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித பெர்னான்டோ கேட்டுள்ளார்.

(ம-86)

## சப்பற வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 1

வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் சப்பற வெள்ளோட்டப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 9.05 மணி தொடக்கம் 10 மணிவரை உள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான அருளாசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்யசுவாமிகள் நிகழ்த்தவுள்ளார்.

(ம-16)

## பாடசாலை 2 ஆம் தவணை விடுமுறை இன்று

யாழ்ப்பாணம், ஒக. 1

அரசாங்க பாடசாலைகள் யாவும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்று புதன்கிழமை மூடப்படவுள்ளன. மீண்டும் மூன்றாம் தவணைக்காக அடுத்த மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகும்.

(ம-10)

# இரு மாத நிவாரணம் ஒன்றாக வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக. 1

இரு மாதங்களுக்குரிய உலர் உணவு நிவாரணப் பொருள்கள் ஒரேதடவையில் பொது மக்களுக்கு வழங்கப்பட உள்ளன.

ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்களே இன்று முதல் பொதுமக்களுக்கு உடனடியாக விநியோகிக்கப்படவுள்ளன.

அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு நிவாரண ஒதுக்கீட்டைப் பெற்று உடனடியாக பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும்—

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் இரு மாதகாலப் பகுதிக்குமான நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படவேண்டும் எனவும் —

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

(ம-6)

## குடாநாட்டு மாணவர்களுக்கான
# அடுத்த ஆண்டுக்குரிய புத்தகங்களை வருட இறுதிக்குள் அனுப்ப ஏற்பாடு
## கல்வி அமைச்சின் செயலர் உறுதி

யாழ்ப்பாணம், ஒக. 1

குடாநாட்டு மாணவர்களுக்கான அடுத்த கல்வியாண்டுக்குரிய பாடப் புத்தகங்கள் அனைத்தையும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னதாக அனுப்பி வைக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் தெரிவித்துள்ளார்.

தனது மகனுக்குரிய பாடப் புத்தகங்களை உரிய காலத்தில் வழங்கத் தவறியதன் மூலம், அரசு அரசமைப்பையும், மனித உரிமைகளையும் மீறிவிட்டதாக குற்றஞ்சாட்டி சுன்னாகத்தைச் சேர்ந்த அ. பரமேஸ்வரன் கடந்த மே மாதம் கல்வி அமைச்சர், சட்டமா அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சட்டத்தரணி மூலம் 'நோட்டீஸ்' அனுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்து அனுப்பப்பட்ட கடிதத்திலேயே கல்வி அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாடநூல்கள் வெளியீட்டு திணைக்களத்தின் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக அச்சுப் பணியில் தாமதம் ஏற்பட்டதால் 2001 ஆம் ஆண்டுக்கான சில பாடப் புத்தகங்களை குறித்த காலத்தில் குடாநாட்டுக்கு அனுப்பி வைக்க முடியாமல்போனது என்று தெரிவித்துள்ள கல்வி அமைச்சு செயலாளர், அதற்குத் தனது வருத்தத்தையும் தெரிவித்துள்ளார். மன்னிப்பும் கோரியுள்ளார்.

அதேவேளை —

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் மற்றும் இந்த ஆண்டு ஜனவரி, மார்ச் மாதங்களில், குடாநாட்டுக்குத் தேவையான 95 சதவீதமான பாடநூல்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் —

மீதிப் புத்தகங்களை முடிந்த அளவு விரைவில் அனுப்ப அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் —

தாரா டிமெல் உறுதி அளித்துள்ளார்.

(ம-ஓ)

## இலவச கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், ஒக. 1

மானிப்பாய் வட்டலயன்ஸ் கழகம் மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் விழி வெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நவாலி தெற்கு சென். பீற்றர்ஸ் பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

பரிசோதனை முகாமுக்கு வருகை தரும் ஒழுங்கின்படி குறிப்பிட்ட தொகையினரே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளதால் நேரத்திற்கு வருகைதருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10)

# பேராதனைப் பல்கலைக்கழக சாகித்திய விழாப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு, ஒக. 1

21 ஆம் நூற்றாண்டின் உரிமையாளர்களாக மிளிரப் போகும் இன்றைய இலங்கை மாணவர் சமூகத்தினரின் மறைந்திருக்கும் படைப்பாற்றல் மூலமாக அல்லலுறும் மானிடரின் அவலங்களை வெளிக்கொணர பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவ்வருடமும் சாகித்திய விழாவைக்கொண்டாட உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எட்டாவது முறையாக, 'எமது தேசத்தின் எழுச்சிக்காக' என்ற கருப்பொருளில் மாணவர் சாகித்திய விழா நடைபெற உள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் கவிதை, பாடல் இயற்றுதல், சிறுகதை போன்ற பல போட்டிகள் இடம்பெற உள்ளன. இப்போட்டிகளில் 8 ஆம் தரம் முதல் 13 ஆம் தரம் வரையான பாடசாலை மாணவர்கள் பங்குபற்றலாம்.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் ஆகியோரும் பங்குபற்ற முடியும்.

போட்டிகளில் வெற்றி பெறுவோர்களுக்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெற உள்ள சாகித்திய விழாவின்போது வழங்கப்படும்.

(ம-152)

## கல்விக் கல்லூரி டிப்ளோமாஆசிரியர் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 1

கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ம-10)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 1

கீழ்க்காணும் பெயர்கள் உடையவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணாகடாட்சகுரு உதய ஜெயகதா (வீரமாணிக்க தேவன்துறை, பாதிரிவளவு, மயிலிட்டி, சிதம்பரப்பிள்ளை சிவதாசன் (சிறுவர் இல்லம், திருநெல்வேலி.)

(ம-10)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 1

'சனத் தொகையும் குடும்பநல வாழ்வும்' எனும் விடயம் தொடர்பான ஆசிரிய பயிற்சிக் கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களை இக்கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ம-10)

## சுன்னாகத்தில் சுற்றிவளைப்பு

வலி. வடக்கு, ஓக. 1

நேற்று முன்தினம் சுன்னாகம், ஏழாலை, கட்டுவன், குப்பிழான் பகுதிகள் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

பெருமளவிலான இராணுவத்தினர் இந்தச் சோதனை நடவடிக்கையில்காலை முதல் ஈடுபட்டனர்.

வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர் அடையாள அட்டைகள், இராணுவப் பதிவுகள் என்பவற்றைச் சோதனையிட்டதுடன் இளைஞர்கள் விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

(ம86)

## கணனி பயிற்சி நெறி ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஒக. 1

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நெல்லியடி சனசமூக நிலையம் நடத்தும் கணனிப் பயிற்சி நெறியின் ஆரம்ப விழா நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு முருகமூர்த்தி கோவிலடியில் உள்ள தட்டச்சுப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா பயிற்சி நெறியை அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

(ம-10)

# தமது நிலைப்பாட்டை விளக்கி காங்கிரஸ் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஒக. 1

கட்டுநாயக்கா விமானத் தளத் தாக்குதல் மற்றும் இன்றைய அரசியல் சூழ்நிலை ஆகியவை தொடர்பாகப் பேச, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை நிராகரித்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி—

அது தொடர்பான தனது நிலைப்பாட்டை விளக்கி ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தங்களைச் சந்திக்க வரும்படி எமது கட்சிக்கு அழைப்பு விடுத்ததற்கு நன்றி. கடந்த ஞாயிற்றுக்கிழமை உங்கள் அழைப்புத் தொடர்பாக எமது கட்சி கூடி ஆராய்ந்தது. தங்கள் அழைப்புக்குப் பதிலாக எமது நிலைப்பாட்டை விளக்கித் தங்களுக்கு இந்தக் கடிதத்தை அனுப்புவது என அதில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதை நாம் கட்டாயம் நினைவில் கொண்டிருக்கிறோம்.

சமீபத்தில் விமானப்படையினர் வடக்கில் தமிழ் மக்கள் மீது நடத்திய வான் தாக்குதல்களின் எதிர் விளைவே கட்டுநாயக்கா விமானத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தத் தொடர் விமானத் தாக்குதல்களை தற்காப்பு நடவடிக்கை என்று நியாயப்படுத்த முனைந்தபோதும், அமெரிக்காவும், இந்தியாவும் இதற்குத் தமது கண்டனங்களைத் தெரிவித்தன.

வான் தாக்குதலால்ஏற்படும் பயங்கரமான விளைவுகள் குறித்துவிடுதலைப் புலிகளும் அரசை எச்சரித்தனர்.

ஆனால் அமைச்சர் கதிர்காமர், தமிழர்கள் மீதான குண்டு வீச்சுக்கு அமெரிக்காவும், இந்தியாவும் தெரிவித்த கண்டனங்களில் தவறு காணவே முனைகிறார்.

வடக்குக்கு-கிழக்குக்கு கௌரவமான திருப்திகரமான தீர்வு ஏற்பட்டு, நாடு முழுவதிலும் அமைதி நிலவவேண்டும் என்பதே எமது விருப்பம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கையாக, அரசு யுத்த நிறுத்தத்தை அறிவித்து, அமைதி முயற்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும். அதன் பிறகு, விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசித்து திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் — அரசமைப்பை வடிவமைக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இல்லாமல் நாட்டில் அமைதியை எட்ட முடியாது.

பிரிட்டிஷ் வெளியுறவு செயலர் கூட விடுதலைப் புலிகளுடன் பேசும்படி இலங்கை அரசுக்கு அறிவுறுத்தியுள்ளார். இராணுவத்தீர்வு மூலம் நாம் அமைதியை எட்ட முடியாது.

இடம்பெயர்ந்த அனைத்துத் தமிழ் மக்களும் அவரவர் சொந்த இடங்களில் மீளக் குடியேறக் கூடிய விரைவில் அனுமதிக்கப்படவேண்டும். அவர்கள் தொடர்ந்தும் அகதிகளாகவே இருக்க விரும்பவில்லை.

நாடாளுமன்றத்தால் அனுமதிக்கப்படாத சட்டதிட்டங்களையெல்லாம், பாதுகாப்பு அமைச்சும், பொலீஸும் தமிழர் மீது விதிக்கின்றன. இந்த நிலை தொடர்வதை நாம் விரும்பவில்லை.

ஆகவே சர்வஜன வாக்கெடுப்பைத் தவிர்த்து விட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசு விரைவில் கலைக்கப்பட வசதியாக உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி ஜனாதிபதியான தங்களை கேட்டுக் கொள்கின்றோம். அரசியல் கட்சியின் தலைவராக இல்லாமல் நாட்டின் ஜனாதிபதியாகச் செயற்படுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

— இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

உதயன்

## மனச்சாட்சிப்படி நடப்போமா?

☆ குடாநாட்டில் பொறுப்பான பதவிகளில் உள்ளோர் தமது பணிகளுக்கு அப்பால் சமுதாய மறுமலர்ச்சிப் பணிகளிலும் ஈடுபட வேண்டும்.

☆ சகலரும் தமது கடமையை தங்கள் மனச்சாட்சிப்படி செய்ய முன்வரவேண்டும். அரச அதிபராக இருந்தால் என்ன, நீதிபதியாக இருந்தால் என்ன தமது பணிகளை மனச்சாட்சிப்படி மேற்கொண்டால் இன்றைய அவலநிலை சமுதாயத்துக்கு ஏற்படாது. மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்படத்தொடங்கும் போதுதான் தவறு ஆரம்பமாகுகின்றது. அந்தத் தவறு விஸ்வரூபம் எடுத்து சமுதாயத்தையே பாதிக்கின்றது.

- யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

யாழ்.குடாநாட்டின் இன்றைய அவல நிலைக்கு இவைதான் முக்கியமான - அடிப்படைக் காரணங்கள்.

நிவாரணக் கொடுப்பனவில் வளர்ந்துவிட்ட நமது சமூகம் - அதன அங்கத்தவர்கள் - 'தனது', 'தங்களது' என்ற சுயநல வட்டத்துக்குள் நின்று கொண்டு - சமுதாய மறுமலர்ச்சிப் பார்வையைத் துறந்து - குறுகிய மனப்பான்மையுடன் செயற்படுவது சமுதாயத்தைப் பாதிக்கின்றது; சீர்கெடுக்கின்றது.

அத்தோடு அதிகாரத்தில் இருப்போர் - அரசியல்வாதிகள் முதல் அதிகாரிகள் வரை - வர்த்தகர்கள் முதல் பொதுமக்கள் வரை - அனைவரும் சமூகத்துக்கு நீதியாக நடக்க வேண்டிய தமது கடமையைத்துறந்து, மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்படுவது சமூகத் தவறுகளுக்கு வித்திடுகின்றது என்பது நீதிவான் சுட்டிக்காட்டிய மற்றைய அம்சம்.

அரசியல்வாதிகள் தங்கள் அதிகார எல்லைக்கு - வரம்புக்கு - அப்பாற் போய் அதிகாரத் துஷ்பிரயோகம் புரிகின்றார்கள். அதற்கு தங்களது துணைப்படைகளையோ, அரச படைகளையோ, தனியார் குண்டர் குழுக்களையோ அல்லது அரசியல் செல்வாக்கையோ பலமாகச் சேர்த்துக்கொள்கின்றார்கள். அந்த அரசியல்வாதிகளுக்குப் பயந்து - அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக - மூத்த அதிகாரிகள் தமது நெறிமுறைகளுக்கு அப்பால் போய் - சட்ட திட்டங்களுக்கு விலகி - நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள். இது ஒரு சங்கிலி போல மூத்த அதிகாரிகளில் இருந்து அடுத்த மட்ட அதிகாரிகளுக்கும் அப்படியே கீழே பொதுமக்கள் வரையும் பரவுகின்றது. ஒவ்வொருவரும் மேலே உள்ளவரின் அழுத்தம் என்று சாட்டுக் கூறிக்கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து கொண்டிருப்பதால் அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் மனிதாபிமான விரோத செயற்பாடுகளாகவே அமைந்து விடுகின்றன.

வறுமைக் கோட்டில் வாழும் அப்பாவி ஏழை, எளிய மக்களின் வயிற்றுப்பாட்டோடு சம்பந்தப்பட்டது நிவாரணக் கொடுப்பனவு. அதற்கான பொருள்களை கொழும்பில் சேர்த்துக்கொள்வது முதல் அவற்றை இங்கு கொண்டுவந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிப்பது வரையில் பல பெருச்சாளிகள். ஒவ்வொன்றும் மனச்சாட்சியை அடகு வைத்துவிட்டு பண்ணும் அட்டூழியம் பெரும் சமூகச் சீர்கேடு.

இப்படி ஒவ்வொரு விடயத்திலும் நிலவும் சமூகச் சீர்கேடுகளுக்குப் பின்னால் அடிப்படையாக அமைந்திருக்கும் ஒரே அம்சம் - மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பது என்பதுதான்.

எனவே நீதிபதி குறிப்பிடுவது போல அதிகாரி முதல் அப்பாவிப் பொதுமக்கள் வரை அனைவரும் தத்தமது மனச்சாட்சிப்படி தமது கடமைகளைப் புரிந்தால் நீதிமன்றம் தேவையில்லை; காவல்துறையும் அவசியமில்லை. சமூகம் தானாகவே திருந்திவிடும்.

அதை நமது சமூகம் செய்யுமா, தன்னைத்தானே திருத்திக்கொள்ளுமா என்பதுதான் கேள்வி.

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



## மால் மருகா மயில்மேல் வருவாய்

மால் மருகா மயில்மேல் வருவாய்
வேல் முருகா வினை தீர்த்திடுவாய்
பால் தருவோம் நற் பழம் தருவோம்
சேல் விழியார் நின் துணை வரவே
தீந் தமிழால் உன் திறம் பணிவோம்
மால் மருகா மயில் மேல் வருவாய்

- ப.க.மகாதேவா.

## இன்பநிலை எய்த அருள் தாராய்!

நல்லூரில் காட்சிதரும் ஞானமுகம் ஒன்றே
நாடிவரும் அன்பர்க்கருள் நல்குமுகம் ஒன்றே
சொல்லுதமிழ் கவிதை பல சொல்லுமுகம் ஒன்றே
தொண்டரிடர் அத்தனையும் கொல்லுமுகம் ஒன்றே
பொல்லாத யுத்தநிலை போக்குமுகம் ஒன்றே
பூவையர்தம் மானநிலை காக்குமுகம் ஒன்றே
எல்லோரும் இன்பநிலை எய்தஅருள் தாராய்
ஏறுமயில் ஏறிவரும் ஆறுமுகன் நீயே!

- வ.சின்னப்பா.
*(தனங்கிளப்பு)*

## வேதனை தணிப்பாய் கந்தா!

பெருகிடும் அன்பு வெள்ளம்
பக்தியாய் ஊற்றெடுத்து
உருகிடும் அடியா ரெல்லாம்
உன்னடி பற்றி நிற்க
திருகிடும் வெகுளி வீங்கி
விம்மலாய் நிற்கும் வேளை
வெருவிடும் எம்மனோரின்
வேதனை தணிப்பாய் கந்தா!

- நடனமுருகன்
*யாழ்ப்பாணம்.*

## "சகதியாய்ப் போவதுவோ சாற்று"

*முற்றத்து மண்ணமர்ந்து முழுநிலாவிற் கதைபேசி*
*சுற்றமொடு வாழ்ந்த சுகமெங்கே – இற்றரையில்*
*அகதியாய் முகாமில் அடங்கியே எம்வாழ்வு*
*சகதியாய் போவதுவோ சாற்று!*

செ.சுதாகரன்
*மட்டுவில் வடக்கு.*

## கோழிக்குஞ்சு விநியோகம்

வலி.தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்கனவே கோழிக்குஞ்சுகளுக்குப் பதிவு செய்தவர்களுக்கான கோழிக்குஞ்சுகள் எதிர்வரும் 4ஆம் திகதி சங்கத்தில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளது.

வளர்குஞ்சுகளுக்கான தீன் வகைகள், கால்நடைகளுக்கான மருந்துகள் என்பன தற்போது சங்கத்தால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சங்கத்தில் சேர விரும்புபவர்கள் அலுவலகத்தில் உள்ள விண்ணப்ப படிவத்தைப் பூர்த்திசெய்து ஒப்படைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-152)

## நாளை

ஆடி 17
வியாழக்கிழமை
திதி: திரயோதசி
முற்பகல் 8.23 வரை
நட்சத்திரம் : பூராடம்
மாலை 6.02 வரை
சுபநேரம் : 7.33 - 9.03
ராகுகாலம் : 1.33 - 3.03
(பழைய நேரப்படி)

## தாச்சிப் போட்டி

வலி.வடக்கு,ஓக.1

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வலி.தெற்கு பிரதேச சபை மருதனார்மடம் திறந்த வெளி அரங்கு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

உடுவில் ஞானப்பிரகாசர் விளையாட்டுக் கழகம் எதிர் கொக்குவில் இளம்பிறை விளையாட்டுக்கழகம். (ம-86)

## இலங்கை வங்கியின் 62ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஓக1

இலங்கை வங்கியின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மேல் தரக்கிளையில், பிரதான முகாமையாளர் சி.நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறும். (ம-173)

## உதயவாக்கு

ஒரு நாள் கவலை, ஒரு மாத மகிழ்ச்சியை விட நீளமானது.

# நாட்டு நடப்பு

### நல்லையில் - II

குனிந்து குனிந்து குமுதா
கும்பிடு போட்டுச் செல்ல
அணிந்த அவள் பதக்கம்
அடித்து மண்மேல் ஒலிபரப்ப
'எதற்கடி இதனை மாட்டி
இங்கு நீ வந்தாய்?' என
'இதனை நான் அணியா விட்டால்
என்னையார் மதிப்பார்?' என்றாள்.

*- விகடகவி -.*

# கட்டுநாயக்கா தாக்குதல் தொடர்பாக இதுவரை 19 விமானப் படையினர் கைது

## 200க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை

கொழும்பு,ஓக.1

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக இதுவரை 19 விமானப் படையினர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 200க்கும் மேற்பட்டவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

விமானத் தளங்களினது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு, சம்பவம் நடைபெற்ற நேரம் 500ககும் மேற்பட்ட பாதுகாப்புப் பிரிவினர் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் சுமார் 15 வரையான புலி உறுப்பினர்கள் இவ்விரு தளங்களினுள்ளும் ஊடுருவி பேரழிவை ஏற்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் 200க்கும் மேற்பட்ட விமானப் படையினரை விசாரணைக்குட்படுத்தி உள்ளதுடன், அன்றைய தினம் கடமையில் இருந்த அனைத்துப் படையினரையும் விசாரணைக்கு உட்படுத்த உள்ளனர்.

இந்த விசாரணைகளின் போது கைது செய்யப்பட்ட 19 படையினரில் மூவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் இருவர், புலிகள் ஊடுருவியதாகக் கூறப்படும் குரான விளையாட்டு மைதானப் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பு வேலிகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட படையினர் ஆவர். மூன்றாமவர் சம்பவம் நடைபெற்ற போது பிரதான கோபுரத்துக்குப் பொறுப்பாக இருந்தவர். (ம)

# அமைச்சர் டக்ளஸ் அழைத்தால் உடன் சென்று சந்திக்க வேண்டும்

## கிராம அலுவலர்களுக்கு அரச அதிபர் பணிப்பு

கோண்டாவில்,ஓக.1

வடக்கு மாகாண அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண தமிழ், இந்துசமய விவகார அமைச்சர் அழைக்கும் சந்தர்ப்பத்தில் கிராம அலுவலர்கள் உடனடியாகச் செல்ல வேண்டுமென அரச அதிபரினால் பணிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அபிவிருத்திச் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் மற்றும் மககள் குறைகள் சம்பந்தமாகவும் அழைக்கும் சந்தர்ப்பத்தில் கிராம அலுவர்கள் செல்ல மறுத்துவருவதாக அமைச்சர் அரச அதிபருக்குச் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேற்படி விவரங்களடங்கிய கடிதம் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம)

## துணைவேந்தர் நலநிதியக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் நலநிதியக் கொடுப்பனவு பெறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட மாணவர்களுக்கான முதலாம் தவணைப் பணம் நாளை வியாழக்கிழமை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கலந்துரையாடல்

வலிகாமம் தெற்கு,ஓக.1

வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் திட்டமிடப்பட்டுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான விசேட கணித செயற்றிட்டம் பற்றிய கலந்துரையாடல் வலிகாமம் கல்வி வலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. (ம-152)

## கபடிப் போட்டி

நல்லூர்ப் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டுவரும் கபடிச் சுற்றுப் போட்டியில் ஆண், பெண் பிரிவுகளுக்கான இறுதிப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி ஆலயத்திற்கு அருகில் நடைபெறவுள்ளன. (ம-86)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆ

01-08-2

## ஆலய பரிபாலன சபைத் தலைவரின் செய்தி

ஈழவள நாட்டிலே பிரசித்தி பெற்ற ஆலயங்களிலே வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயமும் ஒன்றெனக் கருதப்படுகின்றது. வடக்கே பெருங்குளத்தின் நீர்ப்பரப்பும் கிழக்கே நால்வர் மடமும் தெப்பக்குளமும் அமைந்திருக்க தெற்கில் மகாவித்தியாலய கலைக்கோயில் தலைநிமிர்ந்து நிற்க நடுவிலே காலத்தையும், கற்பனையையும் கடந்த எங்கள் முத்துமாரி திருச்சந்நிதி அமைந்திருக்கும் அமைப்பு இலங்கையில் வேறு எங்கும் காணமுடியாத ஒன்றாகும். இப்பெருமை பெற்ற அம்பிகை காலத்திற்குக் காலம் தன் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் தேவையென்று திருவுளம் கொள்ளும் சமயங்களில் எல்லாம் தவறாமல் திருத்தொண்டர்களை உற்பவிப்பவள். அந்த வகையிலே திருத்தொண்டர்கள் பலர் அவ்வப்போது தோன்றி அம்பிகையின் திருக்கடாட்சத்தைப் பெற்று தேவகைங்கரியத்தில் தம் வாழ்நாளைக் கழித்தமையின் பலனாகவே இப்போதிருக்கும் எழுச்சியுற்ற திருக்கோயிலை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த வகையிலே அம்பிகைக்கு இருந்த அழகிய சப்பறம் காலக்கழிவினால் பழுதடைந்து போகவே பல ஆண்டுகளாக சப்பறம் இல்லாத குறையை நீக்க திருவுளம் கொண்ட அம்பிகை இக்கைங்கரியத்தை நிறைவேற்ற சப்பறத்திருவிழா உபயகாரர்களிலிருந்து சில திருத் தொண்டர்களை உருவாக்கினார். அவர்கள் அம்பிகையின் மீது கொண்ட ஆழமான பக்தியின் பயனாக ஆலய பரிபாலனசபையினருடன் தொடர்பு கொண்டு சப்பறத்திருப்பணிச் சபையை ஸ்தாபித்து பரிபாலன சபையின் பூரண ஒத்துழைப்பையும் வேண்டிநின்றனர். ஆலய பரிபாலன சபைத்தலைவர் என்ற வகையில் இக்கைங்கரியம் இவ்வருடமே நிறைவேறி இம்மகோற்சவத்தில் அழகிய சப்பறம் வெள்ளோட்டம் விடப்படவேண்டும் என்ற அதீத எண்ணம் எமது உள்ளத்தில் குடி கொண்டபடியால் இத்திருப்பணிக்கு எமது பூரண ஒத்துழைப்பையும் வழங்கி இத்தொண்டர்களுடன் இப்பணிநிறைவேற எமது சகல ஒத்துழைப்பையும் வழங்கினேன். இதன் பயனாக பல ஆண்டுகளாகச் சப்பறம் இல்லாத குறையை நீக்கி பல தடைகளையும் தாண்டி நான்கு மாத காலத்திற்குள் புதிய சப்பறத்தினை திறம்பட அமைத்து இன்று வெள்ளோட்டம் காண உழைத்த சப்பறத்திருவிழா உபயகாரர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள் என்றால் இவை அனைத்தும் அம்பிகையின் செயல் அன்றி வேறொன்றும் இல்லை. அந்தப் பெருமாட்டியின் இந்தத் திருப்பணிக்குத் தொண்டிலே உலர்ந்தவர்கள் அவருடைய கருணையென்னும் பெருவெள்ளம் பெருங்குளத்து வெள்ளம் போல் பிரவாகித்து ஓடும் போது அதிலே நனைந்து நனைந்து இன்பம் அடைவர் என்பது உண்மை. சொல்லுக்கடங்காத இந்த முத்துமாரி அம்மையின் திருவருட் சக்தியெல்லாம் அடியார்களுக்கு வல்லமை தந்துவிடும். அதன்மூலம் இன்னும் பல திருப்பணிகளை நிறைவேற்றுவோமாக. சப்பற வெள்ளோட்ட விழா சிறப்புற அம்பிகையை வேண்டுவோமாக.

**திரு.க.சரவணநாதன்** (தபாலதிபர்)
**தலைவர்,**
**பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை,**
**வேலணை.**

## பெருங்குளத்து அம்பிகை புதிய சப்பறத்தில் காட்சி தந்தாள்

வேலணை பெருங்குளப் பதியில் அமர்ந்து அடியார்களுக்கு அருள் வழங்கும் எங்கள் தாய் முத்துமாரி அம்பாள் இன்று புதிய சப்பறத்தில் எழுந்தருளி எமக்குக் காட்சி தருகிறாள். இந்த ஆலயத்தில் நெடுநாள்களாக இருந்து வந்த குறையொன்று இன்று தீர்ந்துள்ளது. நீண்டகாலமாக அன்னையை பெரிய சப்பறத்தில் பார்க்கும் அந்த வாய்ப்பு எமக்குக் கிட்டாமல் இருந்தது. இன்று புதிய பெரிய சப்பறத்தில் கம்பீரமாக அமர்ந்து அன்னையவள் எமக்கு அருட்கடாட்சம் வழங்குகிறாள். பல்வேறு சிரமங்களும்,நெருக்கடிகளும் நிலவுகின்ற இக்காலப்பகுதியில் இந்த இறைபணியில் ஈடுபட்டு உழைத்தவர்கள் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இந்தப் திருப்பணியோடு மட்டும் நாம் நின்றுவிடாது இன்னும் பாரிய திருப்பணியொன்றுக்கு நாம் தயாராக வேண்டும். அன்னைக்கு 'இராஜகோபுரத் திருப்பணி' எம்முன்னே உள்ளது. கால ஓட்டத்தின் புலம்பெயர்வு காரணமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பணி இடையில் தடைப்பட்டு நிற்கின்றது. இப்பணி மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும். 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்' என்ற அருள் வாக்கிற்கு இணங்க இராஜகோபுரத் திருப்பணிக்கு அடியார்கள் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும் என்று கேட்டு இப்பாரிய திருப்பணிக்கு எங்கள் அன்னை வழிகாட்டுவாள் என்று நம்பி முத்துமாரி அம்பிகையின் பாதங்களைப் பணிந்து நிற்போம்.

*அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம்பெறலாம்.*

**திரு. வா. தவச்செல்வம்(ஜே.பி),**
**உபதலைவர், பெருங்குளம் முத்துமாரியம்மன்**
**ஆலய பரிபாலனசபை,**
**வேலணை.**

## ஆதீன முதல்வரின் அருளாசி

**அம்பிகை அடியார்களே!**

வேலணை பெருங்குளம் பகுதியில் எழுந்தருளி அருளாட்சி புரியும் முத்துமாரி அம்பாளுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சப்பறம் வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். பழைமையும், பெருமையும் வாய்ந்த வேலணைப் பிரதேசம் பல ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. 'கோயில் இல்லா ஊர் திரு இல் ஊர்' என்று தேவாரம் கூறுவதற்கு அமைய மக்கள் தங்களது பண்பாட்டையும் ஆன்மீகத்தையும் நெறிப்படுத்தும் பொருட்டு ஆலயங்களை மையமாகக் கொண்டு வாழ்கின்ற தன்மையால் ஆலயத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனில் மகோற்சவம் முக்கியத்துவம் பெறுகின்றது. இறைவனது பஞ்ச கிருத்திய செயற்பாடுகளை வெளிப்படுத்துவதாக அமைவதால் மனிதப்பிறவியினது பயனை அனுபவிக்கும் செயலாவதால் சப்பறத் திருவிழா அருளுதல் எனும் செயற்பாட்டை உணர்த்துவதாகும். இறைவனை சப்பறத்தில் எழுந்தருளச் செய்து வழிபாடு செய்வது ஆலய கோபுர தரிசனத்தைப் பெறுவதாகும். அதனாலேயே சப்பற அமைப்பு இராஜகோபுரம் போன்று அமைந்திருக்கும். இப்பணியை பெருங்குள முத்துமாரி அம்பாளுக்கு அமைத்து அம்பிகையை எழுந்தருளச் செய்வது அருளைப் பெறுவதாகும். இதனை உருவாக்கித் தந்த சிற்பக் கலைஞர்களுக்கும், சப்பறத்திருப்பணிச் சபையினருக்கும், பெருங்குளம் வாழ் மக்களுக்கும் அம்பிகையின் அருள் கிடைப்பதாக!

**'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசார்ய ஸ்வாமிகள்**
*இரண்டாவது குருமகா சந்நிதானம்,*
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.*

## உருகாதார் உள்ளத்தை உருக வைக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் திருவருட் பெருமை

வேலணை பெருங்குள முத்துமாரி அம்பாள் ஆலய வீதியிலே இன்று அழகிய சப்பறத்தில் அவனியில் பவனி வருகின்ற அருட்காட்சி வியக்கத்தக்கது. மெய் சிலிர்க்க வைப்பது. ஒரு பக்கம் விநாயகப் பெருமானும் மறுபக்கம் முருகப் பெருமானும் அழகிய சப்பறத்திலே வீற்றிருக்க முத்துமாரி அம்பாள் நடுவே அமர்ந்து அருளொளி வீசி புன்னகை புரிந்து உலாவரும் காட்சி உன்னதமானது. உருகாதார் உள்ளத்தையும் உருக வைப்பதாகும்.

ஸ்தூலலிங்க தோற்றமாகக் காட்சியளிக்கும் சப்பறத்திலே அம்பாள் சிங்க வாகனத்திலே வீற்றிருப்பது "சமஸ்த சம்ஸ ஹிருதயம் போஜ நிலையாய நம" என மந்திரங்களாக ஒலிக்கப்படுகின்றது. சகல ஜீவராசிகளின் இருதயங்களிலும் இறைவன் இருக்கின்றான் என்பது பொருளாகும். மனிதனது ஆணவப்பித்து தலைக்கேறிய வேளையில் அதனை அகற்ற உள்ளமும் உடலும் ஆண்டவன் அடியில் அணைய பல உபாசனை வழி முறைகள் உள்ளன. அதில் ஸ்தூலலிங்கமாகக் காட்சியளிக்கும் சப்பறத்திருவிழாவும் ஒன்றாகும். எளிமையாக ஆண்டவன் பக்திக்கு வசமாகின்றார் என்பதை உணர்த்த சப்பறத் திருவிழா உறுதியாக அமைகின்றது.

சப்பறம் சரீரத்தின் அமைப்பாகும். சப்பறத்தில் அமைந்திருக்கும் பீடம் நமது இருதய பீடத்தைக் குறிக்கின்றது. இருதயமாகிய பீடத்திலேதான் இறைவனை அமரச் செய்கின்றோம். சப்பறத்தில் அம்பாள் அமர்ந்ததும் சப்பறம் ஓடத் தொடங்குவது போல் எமது இதயத்தில் இறைவன் அமர்ந்ததும் வாழ்க்கைச் சப்பறம் ஓடத் தொடங்கும். சப்பறத்திலிருந்து இறைவனை இறக்கியதும் சப்பறம் ஓடாது. அதே போல் எமது இருதய பீடத்தில் இருந்து இறைவனை இறக்கினால் வாழ்க்கை ஓடாது. இத்தத்துவத்தை உணர்ந்து அம்மன் ஆலய அறங்காவலர் சபையினரதும், சப்பறத் திருவிழா மற்றும் நிர்வாக உறுப்பினர்களினதும் ஆக்கத்தினாலும், ஊக்கத்தினாலும் அடியவர்கள் வழங்கிய பேராதரவுடனும் நிர்மாணிக்கப்பட்ட அழகிய சப்பறத்திலே பெருங்குளத்து அன்னை இன்று உலக உயிர்களுக்கு உயிரொலியாக உள்ளத்தை உருக்கும் வண்ணம் உலா வருகின்றாள்.

எனவே அம்பிகை அடியார்கள் அனைவரும் அம்மனை மெய்யன்போடு நினைந்து வழிபட வேண்டும். அருளில்லா ஆன்மா தாயில்லா குழந்தை போலாகும். அம்பிகையின் கடைக்கண் பார்வை ஒரு கணம் விழுந்தால் போதும்.

பிரதிஸ்டா கிரியா கலாமணி,
சிவாகம கலாநிதி
**சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருமணி** அவர்கள்
மகோற்சவ பிரதமகுரு,
வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயம்.



## நீண்ட நாள் கனவு ந

தீவகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களில்
அம்மன் கோயிலும் ஒன்றாகும். 30 வருடங்களுக்கு முன்பு சிறு வய
இன்று காண்பதில் பெரு மகிழ்வு அடைகின்றோம். பலவித சிரம
காலத்தில் இப்பெரிய திருப்பணியைச் செய்து முடித்தமை உபயக
அன்புக்கும் நம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாகும். இம்மகிழ்வான ந
எண்ணி எல்லோரும் இணைந்து வடம் பிடித்து இழுத்து அம்பிகை

*"எம் செயலாவது யாதொன்றும் இல்லை*
*எல்லாம் அவள் செயல்"*

வேலணை பெருங்குளம் மு


**வெள்ளோட்ட விழா சிறப்புற வாழ்த்துவோர்:-**

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
170, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மதுனா ஜுவல்லறி
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ ராதிகாஸ் நகை
189, கஸ்தூரியார் வீதி, யா

நியூ விதுஷா நகைமாடம்
191 HK, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்,
177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சாயிராம்
தொலைத் தொட
வங்களாவடிச் சந்தி, வே

நியூ விதுஷாயினி நகைமாடம்
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.

திலக்ஷனா
தொலைத் தொடர்பகம்
வங்களாவடிச் சந்தி, வேலணை.

தினேக்கா கிறவ
குறிகாட்டுவான் பிரதான வீதி

ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்
வங்களாவடிச் சந்தி, வேலணை.

ஜீவா உணவகம்
வங்களாவடிச் சந்தி, வேலணை.

விதுஷன் உ
வங்களாவடிச் சந்தி, வே

(வி/17632)

# ...ன் ஆலய புதிய சப்பற வெள்ளோட்ட விழாச் சிறப்புமலர்

## ...08-2001



## துர்க்கா துரந்தரியின் செய்தி

வரலாற்றுச்சிறப்பு மிக்கதும் தீவுப்பகுதியை அலங்கரிப்பதும், நித்திய நைமித்திய ஒழுங்கைக் கடைப்பிடிப்பதுமான ஒரு திருக்கோயில் வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் கோயில் ஆகும். நீர்வளமும், நிலவளமும் மிகுந்து காணப்படும் இந்த ஆலயத்தின் சூழல் பக்தியையும் பண்பாட்டையும் எடுத்துக்காட்டி நிற்கும். இங்கு நடைபெறும் மகோற்சவங்களும், அன்ன தானமும் என்றும் நினைப்பதற்குரியவை. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பு நான் இங்கு சென்று பல தடவைகள் உரையாற்றி உள்ளேன். அக்காலத்தில் இங்கு வாழ்ந்த பக்தி உள்ளங்கள் என்னைப் பரவசமாக வரவேற்றதுண்டு. யுத்தச் சூழ்நிலை காரணமாக இந்த ஆலயத்தின் நித்திய, நைமித்தியங்களுக்கு சிறிது தடை ஏற்பட்ட போதும் தற்போது மகோற்சவம் நடைபெறுவதும் சப்பற வெள்ளோட்டம் இடம் பெறுவதும் மகிழ்ச்சியான செய்தியாகும். புதிய சப்பற வெள்ளோட்டம் சிறப்புற நான் மனமகிழ்ந்து வாழ்த்துகிறேன், முத்துமாரித் தாயின் பெருங்கருணையினால் பேரருள் தரும் அனைத்து நிகழ்ச்சிகளும் சிறப்புற வேண்டுமென மனமார வாழ்த்துகிறேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
சமாதான நீதிபதி,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## அயராத முயற்சியினால் அமைந்தது சப்பறம்

வேலணை முத்துமாரி அம்மன் ஆலயம் பழம் பெருமை மிக்கது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்தே சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா ஆகியவை வரலாற்றுச் சிறப்புடன் நடந்ததை நான் அறிவேன். இக்கோயிலின் சப்பறம் பலமான அடித்தளத்தோடு அமைக்கப்பட்டு அகன்ற படல்களுடன் சிறப்பாக, அழகாக, உயரமாக அமைந்திருந்தது. மக்களின் இடப்பெயர்வால் ஏற்பட்ட பாதிப்பின் சீர்குலைவால் அடித்தளம் பழுதடைந்து சப்பறம் சிதைவடைந்து பயனற்றுப் போய்விட்டது.

இத்திருவிழா உபயகாரர்களின் அயராத முயற்சியினால் இப்போது சப்பறம் புதிதாக அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்ட விழா நடைபெறுகின்றது. முன்னோர்களது வழியைப் பின்பற்றிக் கடமையுணர்வுடன் செயலாற்றும் திருவிழா உபயகாரர்களாகிய இளம் சந்ததியினரின் இச்செயல் பாராட்டிற்குரியது. வெள்ளோட்ட விழா சிறப்பாக அமையவும் இதனை வடிவமைப்பதற்குக் காரணமாக இருந்த விழாச் சபையினருக்கும் அம்பாளின் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

வைத்திய கலாநிதி சி.இராசரத்தினம் (ஜே.பி.)
வேலணை.

## அம்பிகையின் அருட் கருணையும் திருவருட் சக்தியும்

அம்பிகை அடியார்களே!

வேலணையின் பெருங்குளத்தின் கரையில் கோயில்கொண்டு அகில உலகத்திற்கும் அன்னையாகிய ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவருள் கைகூடியதன் பலனைக் கண்டவர் உளம் கண்கொள அடியவர் உள்ளம் பரவசமடைய எழில்மிகு சித்திரச் சப்பறம் கம்பீரமாகக் காட்சி தருகின்ற மாட்சியைக் கண்டு உள்ளம் பூரித்து நிற்கும் வேளை இது. இந்த நேரத்திலே எனது மனத்திரையில் இச்சப்பறம் உருவானது பற்றிய எண்ணங்கள் எழுவது இயல்பு. அந்த எண்ணங்களான, நினைவுகளானவற்றை இம்மலரில் தெரிவிக்க வேண்டியது எமது கடமை என நினைக்கின்றோம். இந்த ஆலயத்தில் எம்முன்னோரால் முன்பு உபயம் செய்யப்பட்ட பெரிய சப்பறம் வீதி உலா வருவதற்குப் பயன்படுத்த முடியாமல் பழுதுற்றுப் போகவே புதிய சப்பறம் அன்னைக்கு வேண்டும் என்ற எண்ணம் பலர் உள்ளத்திலும் கருக்கொள்ள ஆரம்பித்தது. இந்த எண்ணத்தின் பிரதிபலிப்பு எம்மைத் தூண்டியதன் விளைவாக அன்னையின் திருவருளை முன்வைத்து இதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்பு கொண்டு இதற்கான அனுமதியைப்பெற்று, திருப்பணிச் சபை ஒன்றினை ஸ்தாபித்து திருவிழா உபயகாரர்களின் நிதிப் பங்களிப்புடனும், கிராம மக்களின் பேராதரவுடனும், அம்பிகையின் அருட்கருணையுடனும் இப்பாரிய திருப்பணியினை நிறைவு செய்தோம். இத்திருப்பணிக்கு பல வழிகளிலும் எமக்கு உதவிகள் அளித்து எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த சகல அன்பு உள்ளங்களுக்கும் எமது சப்பறத் திருப்பணிச் சபை சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு.ச.கனகசபாபதி,
தலைவர்.

திரு.சு.சசிகரன்,
செயலாளர்.

திரு.க.பாஸ்கரன்,
பொருளாளர்.

## ...கனவு நனவாகின்றது

...மிக்க ஆலயங்களில் வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி
...ளுக்கு முன்பு சிறு வயதில் பார்த்த அழகிய உயர்ந்த சப்பறத்தை
...ற்றோம். பலவித சிரமங்கள் இருந்த போதும் மிகவும் குறுகிய
...ு முடித்தமை உபயகாரர்கள் அம்பிகை மீது கொண்ட தூய
...தும். இம்மகிழ்வான நாளில் நீண்ட நாள் கனவு நனவாகியதை
...து இழுத்து அம்பிகையின் அருள்பெறுவோமாக.

*...யாதொன்றும் இல்லை.*
*...செயல்"*

ந.ஜெகநாதன்,
முன்னாள் தலைவர்,
...ணை பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானம்.

## முத்துமாரியம்மன் திருவருள் பாலித்த திருநாள்

மங்களகரமான விஷூ வருடம் ஆடித்திங்கள் 16ஆம் நாள் புதன்கிழமை எங்கள் வாழ் நாளில் ஒரு பொன்னாள். கண் கொள்ளாத காட்சி ஒன்றைக் காண்கின்ற திருநாள். "அரிது அரிது மானிடராதல் அரிது." மானிடப் பிறவி கிடைப்பது மிகவும் புண்ணியம் செய்தவர்க்கு மட்டும்தான். அதனிலும் அரிது தொண்டு திருப்பணி செய்வது. மகா புருஷன் கட்டைமாதன் செய்த திருப்பயன் அம்பாளின் திருக்காட்சி கிடைத்து திருக்கோயில் கட்டினார். அம்பாளின் திருவருள் பெருகியது. பெருங்குளத்தில் அதன் பிறப்பு பொங்கல், பூசை, மஹோற்சவம் என்று வளர்ந்தது. வேட்டை, சப்பற விழாவைக் கட்டைமாதர் வழி கிழக்கு நாகலிங்கம் மானிப்பாய்பிள்ளை வழி தலை முறையில் வந்தது. அவர்களால் முன்பு உருவாக்கிய பெரிய சப்பறம் காலத்தின் செயலால் அழிந்து உருக்குலைந்துவிட்டது. அதனால் 1970ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை அழகு வீதியை அலங்கரிக்காமல் விட்டது பெரிய சப்பறம். இக்குறைபாட்டை நீக்க 1998அம் ஆண்டு சப்பறத் திருவிழா உபயகாரர் திரு.ச.கனகசபாபதி அவர்கள் தலைமையில் ஒரு திருப்பணிச் சபை நிறுவப்பட்டது. செயலாளர் சு.சசிகரன், பொருளாளர் க.பாஸ்கரன் மற்றும் உறுப்பினர்களும் கண்ணயராது பாடுபட்டு அம்பிகையின் திருப்பணியில் நிறைவு கண்டனர். அதன் பயன் பெருங்குளத்து முத்துமாரியம்மன் திருவீதியில் புதியதோர் அமைப்பில் திருவருள் நிறைந்த பொலிவுடன் அம்பாளின் சக்தியால் வெள்ளோட்டம் காணும் அடியார்களே, இத்திருப்பணியின் உபயகாரர் நமது தாய் மண்ணில் நடைபெறும் கொடிய யுத்தத்தால் இடம்பெயர்ந்து, நலிவுற்று, பலம் குறைந்த நிலையில் அம்பாளின் திருப்பணியை நிறைவு செய்தனர். முத்துமாரித்தாய் தைரியம் தந்தாள் அதன் பயன் மலையரசி, அலையரசி, கலையரசி கடைக்கண் பார்வை கிடைத்து வளர்ந்தது சப்பறம்; தவழ்கின்றது தாய் வீதியில். நடந்தது கனவா அல்லது நனவா – அற்புதம் யாருக்கும் தெரியாத புதுமை. புதுமை காணப் புறப்பட்டு வாருங்கள் வெள்ளோட்டம் காண.

*அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாமே! இது பொய்யாத வாக்கு.*

திரு.ஐ.சிவராஜா,
*ஆலய முகாமையாளர். உப தலைவர் சப்பறத் திருப்பணிச்சபை.*
*பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம் வேலணை.*

## தெய்வீக பக்தியினை வெளிப்படுத்தும் செயல்

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சப்பறத்திற்காக வாழ்த்துச் செய்தியை வழங்க முத்துமாரி அம்பாள் ஆசிவழங்கியமையை நினைத்து, நினைந்து உளம் பூரித்து, புளகாங்கிதம் அடைகின்றேன். 15 வருடங்களுக்கு மேலாக தனக்கென சப்பறம் இல்லாத குறையை இம்முறை முத்துமாரி அம்மன் தீர்த்துக் கொண்டாள். சப்பறத்திருவிழா உபயகாரர்களே முழுப்பொறுப்பையும் ஏற்று பிரமாண்டமான இந்தச் சப்பறத்தை உருவாக்கியமை அவர்களின் தெய்வீகப் பக்தியினை வெளிப்படுத்துவதோடு ஏனையோரையும் மாரியம்மனின் பாதக் கமலங்களில் மண்டியிட வைக்கின்றது. இன்றைய சப்பற வெள்ளோட்ட வைபவம் இனிதே நலமாய் விளங்க எல்லாம் வல்ல பெருங்குளம் முத்துமாரி அம்மன் பாதம் பற்றி இறைஞ்சி நிற்கின்றோம்.

திரு. சு.சுந்தரலிங்கம்,
பொருளாளர், பெருங்குளம்
முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலனசபை.

அம்பிகை அடியார்களே!

ஈழத்திலுள்ள அம்மன் ஆலயங்களுள் தனித்தன்மை பெற்று விளங்கும் ஆலயங்கள் வரிசையில் வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் எங்கள் தாய் முத்துமாரி அம்மனுக்குக் கடந்த பல ஆண்டுகளாக பெரிய சப்பறம் இல்லாத குறை இன்றுடன் தீர்ந்தது. இன்றைய நாள் எமது வாழ்நாளில் மறக்க முடியாத நாளாகும். அம்பிகை புதிய சப்பறத்தில் திருவீதியுலா வரும் காட்சி எல்லோர் மனதையும் கொள்ளைகொள்ள வைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பல சிரமங்களின் மத்தியில் இப்புதிய சப்பறத்தினைக் குறுகிய காலத்தில் வடிவமைத்து அம்பிகைக்கு வழங்கிய சப்பறத் திருப்பணிச் சபையினருக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு சப்பற வெள்ளோட்ட விழாச் சிறப்புற அன்னையின் பாதக் கமலங்களில் இறைஞ்சி நிற்போமாக.

– சுபம் –

திரு.ஐ.ரதீஸ்வரன்
செயலாளர், பெருங்குளம் முத்துமாரியம்பாள் ஆலய பரிபாலன சபை,
வேலணை.


...ஸ் நகை மாளிகை
...ார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ நகுலா ஜூவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறீ கருமாரி நகையகம்
177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

...ாயிராம்
...த் தொடர்பகம்
...் சந்தி, வேலணை.

அலங்கார் நகை மாளிகை
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறீ மாரி நகைமாடம்
78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

...ீன்றண்டிங் மில்
...ிரதான வீதி, வேலணை.

சுதிர் தொலைத் தொடர்பு நிலையம்
அம்மன் கோயில் வீதி, வேலணை.

சரண்யா றேடர்ஸ்
குறிகாட்டுவான் வீதி, வேலணை.

...் உணவகம்
...் சந்தி, வேலணை.

(சா7632)

வேலணை ப.நோ.கூ. சங்கம்
வேலணை.

கடற்றொழிலாளர் கூட. சங்கம்
துறையூர், வேலணை.

உ

ஏழாலை சூராவத்தை

**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்**

தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் விஷுவருடம் ஆடி மாதம் 17ஆம் நாள் நாளை (02.08.2001) வியாழககிழமை அம்பாளின் தேர்த்திருவிழா வெகுவிமரிசையாக நடை பெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

நிகழ்வுகள்

☆ காலை 7 மணிக்கு அபிஷேக ஆராதனை
☆ காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை
☆ பகல் 11 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தல்
☆ பிற்பகல் 2 மணிக்கு பச்சை சாத்தி அம்பாள் இருப்பிடம் வருதல்.

விசேட மங்கள இசை: T.M.வாசகர் குழுவினர்
V.K.கானமூர்த்தி குழுவினர்

"அனைவரும் வருக அவளருள் பெறுக"

துரை பேக்கரி,
சூராவத்தை, சுன்னாகம்.
T.P.070-212762

- தேர்த்திருவிழா உபயகாரர்
அமரர் வேலாயுதம் (துரை)
குடும்பத்தினர்.

குறிப்பு:- அடியார்களுக்கு தர்மகத்தா சபையினரால் நண்பகல் 12மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.
(90625)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 05 - 11 - 1928

உதிர்வு 13 - 08 - 2000

திருமதி
## இரத்தினம் வைரமுத்து

திதி: 01.08.2001

ஆண்டொன் றாயினும் ஆறவில்லை எம்துயரம்
அம்மாவே உம்மை அவனிதனில் இழந்தமையால்
நீண்டபல நாள்கள் சென்றாலும் இப்புவியில்
எம்மினிய அம்மாவே என்றென்றும் உமைமறவோம்.

நாகம்மாள் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(90581)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 11 - 07 - 1927

உதிர்வு 02 - 07 - 2001

திருமதி
## முத்துப்பிள்ளை மாணிக்கம்

எமது குடும்பத்தின் திருவிளக்கே - அம்மா!
நோயில் அழுந்தி நொந்து மனம் வாடாமல்
மின்னலென நீர் மறைந்து சென்றீரே!
ஓவென்று நாம் கதறியழ ஓடி மறைந்தீரே எம் கண்முன்னே
விம்மி வெடிக்கும் எம் வேதனைகள் புரியவில்லையோ?
என்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்து
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (01-08-2001) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்தி வழிபாடு ஆகியவற்றிலும் தொடர்ந்து முற்பகல் (11-00மணியளவில்) நடைபெறுகின்ற மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
மகன்: மா.தர்மலிங்கம்.
காளி கோயிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(90643)

## நாவாந்துறை வாசிக்கு ஒரு வருட கடூழியச் சிறை!

யாழ்ப்பாணம்,ஓக.1

கசிப்பை உற்பத்தி செய்து வைத திருந்த குற்றத்திற்காக கசிப்பு உற்பத்தியாளர் ஒருவருக்கு ஒரு வருட கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட நாவாந்துறையைச் சேர்ந்த சண்முகம் சந்திரன் என்பவருக்கே யாழ். நீதிவான் ஒரு வருட கடூழியச்சிறைத தண்டனை விதித்தார்.

20 போத்தல் கசிப்பை வைத்திருந்த குற்றத்திற்காக இவர்மீது ஏற்கனவே இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்ததாலும் தண்டப் பணமாக 25ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஆனால் குற்றவாளி தண்டப்பணம கட்டத்தவறியதால் அவருக்கு ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ஜ-6)

## புனரமைக்கப்பட்ட கலாசார மண்டபம் திறப்பு விழா

வலி.தென்மேற்கு,ஓக.1

முப்பது இலட்சம் ரூபா செலவில் மானிப்பாயில் புனரமைப்பு செய்யப்பட்ட கலாசார மண்டபம் (CULTURAL HALL) நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு திறந்து வைக்கப்படவுள் ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை தலைவர் வெ.அ.ஜோன்சன் தலைமையில் இடம்பெறவுள்ள திறப்பு விழாவில் ஈ.பி.டி.பி.அமைப் பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலும்மயிலும் குகேந்திரன் (ஜெகன்) மண்டபத்தினைத் திறந்து வைப்பார்.

கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதனும் கலந்துகொள்வார்.(ம-185)

## பாராட்டு விழா

புன்னாலைக்கட்டுவன்,ஓக.1

யாழ்.வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ.சி.நடராஜா அவர்கள் ஓய்வுபெற்றதை அடுத்து அவரைக் கௌரவிக்கும்முகமாக உயர்தர மாணவர் மன்றமும், மாணவர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பாராட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

(ம-133)

## வலி.வடக்கில் கிணறுகள் புனரமைப்பு

சுன்னாகம்,ஓக.1

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தால் 7 குடிதண்ணீர்க் கிணறுகளும் 4 விவசாயக் கிணறுகளும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

கோணப்புலம் இடம்பெயர்ந்தோர் முகாம், எட்டாம்கட்டை, வித்தகபுரம், இளவாலை வடக்கு, பன்னாலை, மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் குடிதண்ணீர்க் கிணறுகளும், மல்லாகத்தில் விவசாயக்கிணறுகளும் புனரமைக் கப்பட்டுள்ளன.

கிணறுகள் திறந்துவைக்கப்பட்ட நிகழ்வில் பொதுக்கிணறுகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய சுகாதாரப் பயிற்சிப்பட்டறை ஒன்றும் நடத்தப்பட்டது. இலவச கையேடுகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை -

வலி.வடக்கில் மேலும் 8 பொதுக் கிணறுகளை புனரமைக்கும் பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுள்ளன.

(ம-27)

## பச்சிலைப்பள்ளி கலாசார விழா

யாழ்ப்பாணம்,ஓக.1

பச்சிலைப்பள்ளி கலை கலாசாரப் பேரவை அபிவிருத்தித் தொண்டர்களின் ஏற்பாட்டில் இடம்பெறும் கலாசாரவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆத்தியடி பிள்ளையார் கோயிலடியில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணி தலைமையில் இடம் பெறும்.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளருமான க.மணிபல்லவராஜன் கலந்துகொள்வார். விகடகவி மு.திருநாவுக்கரசு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

(ம)

# சபிண்டிக்கிரியை



தோற்றம் 14 - 07 - 1916

மறைவு 02 - 07 - 2001

உரும்பிராய் தெற்கு
திருமதி
## பொன்னையா தெய்வானைப்பிள்ளை

(சீதைப்பிள்ளை)

சபிண்டிக்கிரியை - 01-08-2001 புதன்கிழமை

திதி நிர்ணயப் பாடல்

உரும்பிராய்ப் பொன்னையா
உத்தமனார் திருமனையாள்
பெரும்புகழ்சேர் தெய்வானைப்
பிள்ளையெனும் பெண்ணரசி
அரும்பிவளர் விஷு ஆண்டு
ஆனிமதி பூர்வஞ்சேர்
விரும்புதுவா தசித்திதியில்
விண்ணாடு சேர்ந்தனளே!

எம்மையெல்லாம் ஆளாக்கிவைத்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி தெய்வானைப்பிள்ளை பொன்னையா அம்மையாரின் சபிண்டிக்கிரியை இன்று (01-08-2001) புதன் முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அம்மையாரின் ஆன்மா இறைவன் திருவடி நீழலிற் சாந்தியுறும் வண்ணம் பிரார்த்திக்கின்றோம்.

குறித்த சபிண்டிக்கிரியையிற் பங்குபற்றுவதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் வேண்டுகின்றோம்.

'மகேஸ்வரம்'
மானிப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(90669)

# 18ஆவது பிறந்ததின வாழ்த்து



## செல்வன் தவராசசிங்கம் செந்தீஷன்

01-08-2001

கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை வீதியைச் சேர்ந்த தவராசசிங்கம் (குலம், நித்தியலக்ஷ்மி மரக்காலை) சாந்தினி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

## செந்தீஷன்
(West hill C.I.Student)

தனது 18ஆவது பிறந்ததினத்தைக் கனடாவில் இந்திரஜித் மச்சானுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரைக் கொக்குவிலில் வசிக்கும் அப்பா, அம்மா, அம்மப்பா மயில்வாகனம், அம்மம்மா பரிபூரணம், அக்கா லக்ஷனா, தங்கை ஜீவனா, தம்பி வாகீஷன், அத்தை தவராஜேஸ்வரி, டென்மார்க்கில் வசிக்கும் சித்தப்பா தனபாலசிங்கம், சித்தி புனிதராணி, தம்பிமார்களான குணேஸ், வினீத், அலன், கொழும்பில் வசிக்கும் மாமா சாந்த குமாரன், அத்தை தவமணி, மச்சான் மார்களான இன்டுஷன், தெமிஷன், நெதர்லாந்தில் வசிக்கும் மாமா செல்வகுமாரன், அத்தை சத்தியராணி, றோகன் மச்சான், வனஜா மச்சாள் ஆகியோர் கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

Mclevin Avenue,
Scarborough,
Toronto,
Canada. (90329)

மாமன்மார்:-
சாந்தகுமாரன் (கொழும்பு)
செல்வகுமாரன் (நெதர்லாந்து)

# கொழும்பு நகரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர புலிகள் தயாராகின்றனராம்

**22-07-2001 திகதிய ஞாயிறு 'திவயின' பத்திரிகையில் கீர்த்தி வர்ணகுலசூரிய என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

"யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பிசாசு நரகத்தில் மேலதிக அறைகளை அமைத்துக் கொண்டிருக்கும்" என ஜெர்மனியப் பழமொழி ஒன்றுண்டு.

இந்த நாட்டில் பெரும்பான்மையின அரசியல்வாதிகள் அதிகார ஆசையால் ஒருவரை ஒருவர் கடித்துக் குதறிக் கொண்டிருக்கும் போது, எஞ்சியுள்ள உயிர்தப்பும் அரசியல்வாதிகளுக்கு அறைகள் அமைப்பதற்குக் காத்திருக கிறார் வேலுப்பிள்ளை பிரபாகரன். இருப்பினும் இந்தப் புத்தியற்ற அரசியல்வாதிகளுக்கு இது புரியவில்லை. தங்களது பொது எதிரி பிரபாகரன் என்பதை அவர்கள் மறந்துவிட்டனர் போலும்.

"எதிரி பொருத்தமான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்; நாங்கள் அதற்கு இடமளிக்கக கூடாது" என இஸ்ரேலிய படைத்தளபதி மோசே தயான் தனது படையினருக்குக் கூறியிருந்தார்.

இருந்த போதிலும் எமது அரசியல் தலைவர்கள் பயங்கரவாதத் தலைவருக்கு சந்தர்ப்பங்களை அள்ளி வழங்குகிறார்கள். அந்தச் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து தற்கொலைப் படைப் பயங்கரவாதிகள் தயாராகக் காத்திருக்கின்றனர்.

## ஒரு கல்லில் இரு மாங்காய்

எதிர்க்கட்சிகள் தங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளன எனப் புலிகளின் தலைமை உணரும் வேளையில், படுகொலைத் திட்டத்தை இலகுவாக நிறைவேற்ற முடியும். ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புலிகளின் மீது அளப்பரிய நம்பிக்கை வைத்துள்ளார் என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன 'எக்கொனமிஸ்ட்' சஞ்சிகைக்கு 1991இல் அளித்த பேட்டியில் தெரிவித்தார். இஸ்ரேலுடன் தொடர்ந்து தொடர்புகளை வைத்திருக்க வேண்டும் என்ற கொள்கையை, தான் தொடர்ந்தும் கொண்டிருப்பதாகவும் ஜே.ஆர்.அப்போது தெரிவித்திருந்தார்.

பிரேமதாசாவின் அரசைப் போலவே தற்போதைய எதிர்க்கட்சியும் புலிகள் மீது நம்பிக்கை வைத்துள்ளது. இந்த வேளையில் தமிழ்க்கட்சிகள் 'ஒரு கல்லால் இரு மாங்காய்களை வீழ்த்துவது' போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படும் என எதிர்பார்த்திருந்த தமிழ்க்கட்சிகள் தங்கள் எதிர்பார்ப்பு சுக்கு நூறானதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படைகளுக்கு எதிராக நாட்டின் வடக்குக் - கிழக்கில் மாத்திரமன்றி கொழும்பு நகரிலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## செய்தி ஊடகங்களுக்கு புலிகளின் பணிப்பு

இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் ஆகியோருக்கு எதிராக நாடெங்கும் தீவிர பிரசாரங்களை மேற்கொள்ளுமாறு புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பிலுள்ள தமிழ் செய்தியூடகங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளனர். கொழும்பிலுள்ள ஒரு தமிழ் பத்திரிகையும் புலிகளின் "தமிழ் நெற்" இணையத்தளமும் இந்தப் பிரசார நடவடிக்கைக்கு முன்னுரிமை வழங்கின.

இந்த நாட்டிலுள்ள பாதுகாப்புப் படையினர் பெண்கள் மீது நிரந்தரமாக வன்முறைகளில் ஈடுபடுகின்றனர் எனவும் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் கடுமையான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் கடந்த மாதம் முழுவதும் "தமிழ நெற்" இணையத் தளத்தில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான பிரசாரத்தை தமிழ் பத்திரிகை ஒன்றும் மேற்கொண்டது. மதுபோதையில் இருந்த 4 விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்கள் மன்னார் வாசி ஒருவரிடம் 'வீடியோ டெக்கை' கேட்டதாகவும், உரிமையாளர் அதனைக் கொடுக்க மறுக்கவே அவரைக் கைது செய்து நையப்புடைத்ததாகவும் செய்தி வெளியிடப்பட்டது. அதேபோல இலக்கமோட்டை இராணுவ முகாம் பொறுப்பாளரும் சிப்பாய்களும் இந்த 'வீடியோ டெக் உரிமையாளரிடம்' வீடியோ டெக்கைத தருமாறு கூறித் தினமும் தொல்லை கொடுப்பதாகவும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ்க் கட்சிகளின் செயற்பாடு

பாதுகாப்புப் படையினருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே பிரச்சினைகளை உருவாக்கும் நோக்கில புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் இவ்வாறு செயற்பட்டுக்கொண்டிருக்கும் போது, புலிகளுக்காகக் குரலெழுப்பும் தமிழ் காங்கிரஸ், ரெலோ மற்றும் தமிழ் கட்சிகள் ஐ.நா.செயலாளர் கோபி அனனுக்கு மகஜர் ஒன்றை அனுப்ப முடிவுசெய்தன.

பாதுகாப்புப் படையினர் பதினொரு தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டனர் எனவும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன எனவும் இதற்கு முன்னர் மகஜர் அனுப்பியவாகள் புலிகளுக்காகக் குரலெழுப்பும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்காரர்களே ஆவர்.

தமிழ் கட்சிகள் இவ்வாறு புலிகளின் தேவைகளை நிறைவேற்றி கொழும்பு நகரில் கடைகளைப் பூட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது வெட்கப்பட வேண்டியவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் அல்லவா? பிரபாகரன் படுகொலைகளை மேற்கொண்டு வரும் வேளையில், தமிழ்க்கட்சிகள் கொழும்பில் புலிகளின் சக்தியை (TIGER POWER) வெளிப்படுத்தினர் என்பது உறுதி.

புலிகள் தங்கள் தேவைகளுக்காக 10 தமிழ் கட்சிகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதை தமிழ் மக்கள் அறிவர். அண்மையில் 'சிகரெட்' வாங்கச்சென்று காலந்தாழ்த்தி வந்த இளைஞனை அடித்துக் கொன்றவர்கள் ரெலோ உறுப்பினர்களே ஆவர். இது தொடர்பான தகவல் ஒரு தமிழ் பத்திரிகையில் மாத்திரமே வெளிவந்தது. அதன் பின்னர் அந்தச் செய்தி வெளியிடப்படுவது தடுக்கப்பட்டது.

பயங்கரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேலிய கொமாண்டோக்கள் தாக்குதல் நடத்தி அதில் வெற்றிபெற்ற சம்பவத்தை விவரிக்கும் "என்டபே முற்றுகை" (THE RAID ON ENTEEBE) என்ற திரைப்படத்தை இந்த நாட்டில் திரையிடுவதற்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் தடைவிதித்திருந்தார். ஆனால் புலிகளுக்குப் பயிற்சிகளை வங்கியவர்கள யார்? என்பது வெளியானதும் முஸ்லிம் காங்கிரஸ் மௌனம் சாதித்தது.

இஸ்ரேல் மீண்டும் இந்த நாட்டுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பது புலிகளுக்குப் பிரச்சினையாக உள்ளது. டெல்அவிவ் நகர வர்த்தகரும் விளையாட்டு வீரருமான அலொன நவாய் என்பவர் தனது காதலியுடன் அண்மையில் கிழக்கு மாகாணத்திலுள்ள ஆறுமுகம் குடா என்ற பகுதிக்கு சுற்றுலாவுக்காகச் சென்று வந்தார். அவர்களுடன் ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாட்டவர்களும் சென்றிருந்தனர்.

இப்பகுதிக்குப் பெரும் எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் விஜயம் செய்வதால் புலிகள் அது குறித்து அக்கறை எடுக்கவில்லை. இருப்பினும் இந்த இஸ்ரேலிய ஜோடி அங்கு வந்து போனதைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர், அவர்கள் இந்த நாட்டைவிட்டுச் சென்ற பின்னரே அறிந்தனர். புலிகளின் கிழக்கு மாகாணப் புலனாய்வுப் பிரிவினர் இந்த இஸ்ரேலிய ஜோடிபற்றி அறிந் திருந்தால் அவர்களைக் கடத்திச் சென்றிருப்பர். புலிகளால் இந்த ஜோடியைக் கடத்த முடிந்திருப்பின் அது ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு மகிழ்ச்சியான சம்பவமாக அமைந்திருக்கும்.

## வங்கப் பிரதமரை கொல்லச் சதி

இவ்வாறு தகவல்கள் வந்து கொண்டிருக்கும் போது பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனாவைக் கொலை செய்வதற்காக புலிகள் மேற்கொண்ட ஒப்பந்தம் தொடர்பான செய்திகள் வெளியாகின. புலிகளின் தற்கொலை படைப் பெண் போராளிகளான சுபலெட்சுமி மற்றும் தாஸ்லிம் ஆகியோர் பங்களாதேஷ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதை அடுத்தே இந்தத் தகவல்கள் வெளியாகின.

பங்களாதேஷ் இராணுவத்தைச் சேர்ந்த மேஜரான அலாமின் என்பவரின் சகோதரரான நமால் என்பவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் கலப்புக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை மணந்துள்ளார். அந்தப் பெண்ணின் தாய் புலிகளின் பிரிவு ஒன்றில் பணியாற்றுகிறார். அந்தப் பெண் மூலமாக 100 லட்சம் டொலர்களை வழங்கி பங்களாதேஷ் பிரதமரைக் கொல்ல தற்கொலைப் படைப் பெண் போராளிகளை அனுப்பத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஷேக் ஹஸீனா கொலை செய்யப்பட்ட பின்னர் அந்த நாட்டில் உருவாக்கப்படும் நிர்வாகம் இந்து சமுத்திரப் பகுதியில் (வங்காள விரிகுடாவில்) அமைந்துள்ள பங்களாதேஷ் நாட்டிற்குச் சொந்தமான தீவுகளில் இரண்டை ஆயுதப் போக்குவரத்திற்காக தமக்குக் கையளிக்க வேண்டும் எனப் புலிகள் கோரியிருந்தனர் என பங்களாதேஷ் தேசியப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

பேக்கம் காலீதா ஸியா பங்களாதேஷ் பிரதமராகப் பதவிவகித்த போது குடுப்டியா மற்றும் சொனாடியா என்ற தீவுகளில் புலிகளின் பாதுகாப்பு இல்லங்கள் இருந்தன. கம்போடியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் இந்தப் பாதுகாப்பு இல்லங்களிலேயே சேர்த்து வைக்கப்பட்டன. அங்கிருந்து அவை மீன்பிடி வள்ளங்கள் மூலம் முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள சாலைப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டன.

ஷேக் ஹஸீனா படுகொலைத் திட்டம் தொடர்பாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது லண்டனிலுள்ள பிரபல பங்களாதேஷ் வானொலி அறிவிப்பாளரும் கலந்துகொண்டார். ஒப்பந்தம் தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்ட தொகையான 100 லட்சம் டொலர்களைக் கொல்கத்தா (கல்கத்தா) விலுள்ள கணனி வர்த்தகர் ஒருவர்

**தமிழில்: கஜனி**

ஊடாக வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பணம் புலிகளின் கைகளுக்குக் கிடைக்காதவிதத்தில் இந்தியப் புலனாய்வுப் பிரிவான "ரோ" அமைப்பு செயற்பட்டது. இந்த கணனி வர்த்தகர் மர்மமான முறையில் வாகன விபத்தில் மரணமடைந்ததைத் தொடர்ந்து புலிகளுக்குக் கிடைக்க வேண்டிய பணம் இந்திய வங்கியில் முடங்கிக் கிடப்பதாகவும் அதைப் பெற எவரும் முன்வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு பொருத்தப்பட்ட அங்கியை பங்களாதேஷ் நாட்டிற்கு அனுப்ப புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுத்தனர் எனவும், இந்தத் திட்டத்தில் பங்களாதேஷ் நாட்டுத் தூதுவர் ஒருவரும் தொடர்பு கொண்டிருந்தார் என்பதால் அவரும் கைது செய்யப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைப் படைப் பெண் போராளியான சுபலெட்சுமி கொல்கத்தா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். தாஸ்லீம் என்ற பெண போராளி பங்களாதேஷ் நாட்டின் சிட்டகாங் பகுதியில் கைது செய்யப்பட்டார். இந்தப் படுகொலைத் திட்டம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து "ஹர்கத் அல் ஜிஹாத் (HARKAT - UL - JEHAD) என்னும் அடிப்படை முஸ்லிம் அமைப்பு ஷேக் ஹஸீனாவின் சொந்த ஊரில் நடைபெறவிருந்த பொதுக் கூட்டத்தில் பங்குபற்ற அவர் வருகை தரும்போது அவரைப் படுகொலை செய்யத் திட்டமிட்டிருந்தது. கூட்ட மேடையில் இருந்து சுமார் 100 யார் தூரத்தில் 76 கிலோ அதிசக்தி வாய்ந்த வெடிபொருளைக் கொண்ட குண்டு ஒன்றைப் பொருத்த இந்த முஸ்லிம் அமைப்பு திட்டமிட்டிருந்த போதிலும் பங்களாதேஷ் புலனாய்வுப் பிரிவினரால் இது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த இரு முயற்சிகளும் வெற்றியளிக்காத பின்னர் ஷேக் ஹஸீனா அவாமிக் கட்சியின் தலைமையகத் திற்கு வரக்கூடும்என எண்ணி வைக்கப்பட்ட குண்டு வெடித்து 30இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். மூன்றாவது முறையாகவும் அவர் மரணத்தில் இருந்து தப்பினார். இருப்பினும் சதிகாரர் மீண்டும் முயற்சிப்பர் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

## நிமலராஜன் நினைவுக் கட்டுரை

இதற்கிடையில் புலிகளின் முகவர் என படைத்தரப்பினால் அடையாளங்காணப்பட்டவரும் வெளிநாட்டுப் பணத்தில் சுகபோகம் அனுபவிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களால் துணிச்சல்மிக்க பத்திரிகையாளர் எனவர்ணிக்கப்பட்டவருமான நிமலராஜனின் மறைவை புலிகளின் குரல் பத்திரிகை நினைவு கூர்ந்தது. அந்தப் பத்திரிகை வெளியிட்ட கட்டுரையில் மேலும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

நிமலராஜன் தனது உற்ற நண்பன் என 'தமிழ்நெற்' இணையத்தளத்தை நடத்திவரும் முன்னாள் பயங்கரவாதியும் உறுதிப்படுத்தியுள்ளார். நிமலராஜனுக்காக ஊடகவியலாளர் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் புலிகளால் படுகொலை செய்யப் பட்ட அன்ரன் மரியதாஸ் மற்றும் கொழும்பு மாநகரசபை முன்றிலில் கொல்லப்பட்ட ஊடகவியளாலர்கள் சார்பில் நிதியம் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

நிமலராஜன் புலிகளுக்காக வேலை செய்திராவிடின் புலிகள் ஒருபோதும் அவரை நினைவு கூர மாட்டார்கள். "கடந்த காலங்களில் துரோகிகளை இனங்காண முடியாவிட்டாலும் எதிர்காலத்தில் அவர்கள் யார் என்பது தெரியவரும்" என முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தானியாகு தெரிவித்துள்ளார். நிமலராஜனின் படுகொலையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இருப்பினும் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்பதை வரலாற்றுச் சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

## கறுப்பு ஜூலை

இதற்கிடையில் புலிகள் ஜூலை மாதத்தை மறந்திருப்பர் எனக் கூற முடியாது. 1987 ஜூலை 5ஆம் திகதி கப்டன் மில்லர் வெடிபொருள் நிரப்பப்பட்ட லொறியுடன் நெல்லியடி இராணுவ முகாம் சென்று - வெடிக்க வைத்து தற்கொலை புரிந்த தினம் புலிகளால் கரும்புலி தினமாக நினைவு கூரப்படுகிறது. இச்சம்பவத்தில் 39 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

ஜூலை மாதத்தில் புலிகள் பல்வேறு படுகொலைகளை மேற் கொண்டுள்ளனர். 1986 ஜூலை 8ஆம் திகதி திருகோணமலை குரங்குப் பாலத்துக்குச் சமீபமாக 15 சிங்களக் கிராமவாசிகளைக் கொன்றனர். அதே ஆண்டு ஜூலை 13ஆம் திகதி பாவற குளத்தில் 11 சிங்களக் கிராமவாசிகளையும், 17ஆம் திகதி கந்தளாய் சீனித்தொழிற்சாலைக்குள் திடீரெனப் புகுந்து பத்துப் பேரைச்சுட்டும் கொன்றுள்ளனர். 19ஆம் திகதி மதிரிகிரிய என்ற இடத்தில் 12 சிங்களவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். வவுனியாவில் மாமடுப் பகுதியில் நிலக்கண்ணி வெடிக்கு 30 சிங்களவர்கள் பலியானார்கள். ஜூலை 24ஆம் திகதி மதவாச்சியில் பேருந்தில் வைக்கப்பட்ட குண்டு வெடித்து 12 பேர் கொல்லப்பட்டனர். இவை போன்று இன்றும் பல சம்பவங்கள் ஜூலை மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

## ஒரேயொரு கடல் விமானமும் அழிப்பு

1984 இல் காரைநகர் கடற்படை முகாமுக்கு அருகே கடலில் நிறுத்தி வைக்கப்பட்ட கடல் விமானத்தை (Sea plane) புலிகள் தகர்த்தனர். ஸ்ரீலங்காவுக்குச் சொந்தமான ஒரேயொரு கடல் விமானம் அழிக்கப்பட்ட பின்னர் இன்று வரை அவ்வாறான விமானத்தைப் பெறுவதற்குப் பாதுகாப்புப் துறையினர் முயற்சியெடுக்கவில்லை.

முல்லைத்தீவு இராணுவமுகாம் மீதான தாக்குதல் 1996 ஜூலை 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதலின் போது 1417 படைவீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த முகாமில் இருந்த 122 மி.மி. ஆட்டிலறிகள் புலிகளிடம் சிக்கின. அந்த ஆட்டிலறிகள் அழிக்கப்பட்டு விட்டன என இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதிக் கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். ஆனால் அந்த ஆட்டிலறிகள் புலிகளால் கைப்பற்றப்பட்ட தகவல்கள் பின்னர் வெளியாகின.

பீரங்கிப் படைப்பிரிவை உருவாக்குவதற்கு பிரபாகரனுக்குத் தேவையான ஆட்டிலறிகளை வழங்கியவர்கள் அறிவுகெட்ட எமது படை அதிகாரிகளே என்பது இதனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இஸ்ரேலியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள டேவிட் மதானி தொடர்பான தகவல்களை புலிகளின் புலனாய்வுத் துறையினர் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது. கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேல் நலன்காக கும் பிரிவுப் பொறுப்பதிகாரியாக 1984 இல் பணியாற்றிய டேவிட் மதானி தற்போது 17 ஆண்டுகளுக்குப் பின்னர் இஸ்ரேல் நாட்டிற்கான தூதுவராக நியமிக்கப்பட்ட சம்பவம் புலிகளின் வாயை அடைக்கச் செய்துள்ளது. டேவிட் மதானியின் மேற்பார்வையில் இந்நாட்டில் விசேட அதிரடிப் படை உருவாக்கப்பட்டது. டேவிட் மதானி இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். இஸ்ரேலில் ஆட்சி மாறலாம்; ஆனால் அந்நாட்டின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகளில் மாற்றமில்லை என்பது இத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

17 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவின் பொறுப்பாளராகப் பணியாற்றிய ஒருவர் தற்போது அந்நாட்டின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளது நல்லது அல்ல என்பதைப் புலிகள் புரிந்துள்ளனர்.

## புலிகளின் இணையத் தளம்

இதற்கிடையில் புலிகளின் புலனாய்வுப் பிரிவும் பிரசாரப் பிரிவும் கொழும்பில் ஒரு வர்த்தக இணையத தளத்தை நடத்தி வருவது அரச புலனாய்வுப் பிரிவினரால் உறுதி செயயப்பட்டுள்ளது. தங்களது சக்தியை கொழும்பு நகரில் பிரதிபலிக்கும் விதத தில் புறக்கோட்டையில் உள்ள கடைகளை ஹர்த்தால் தினத்தன்று மூடுமாறு புலிகள் தமிழ் வர்த்தகர்களுக்குக் கட்டளையிட்டனர். அரசாங்கமோ அல்லது படைத்தரப்போ இதற்கு எதிர்நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை.

புலிகள் யாழ்.குடாநாட்டில் குடிசன மதிப்பீட்டை எடுப்பதற்குத் தடையாய் இருந்தனர். இதனால் குடிசன மதிப்பீட்டு வேலைகளைக் கைவிட நேர்ந்தது. ஈ.பி.டி.பி. அமைப்பும் இலேசாக - இடைஞ்சலாக இருந்தனர் என வடபகுதித் தகவல்கள் தெரிவிததன. குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு ஐநாவின் அகதிகளுக்கான ஆணைக்குழுவின் ஒத்துழைப்புக் கோரப்பட்டபோதிலும் உரிய பலனேதும் கிட்டவில்லை.

த.வி.கூட்டணித் தலைவர்களான வீ.ஆனந்தசங்கரியும், ஆர்.சம்பந்தனும இணைந்து யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வன்னிக் குறூப்பை (Vanni Group) நடத்தும் கிருஷ்ணசாமி திவ்வியனைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். த.வி.கூட்டணி தற்போது புலிகளின் கட்டளைப்படியே வாயைத் திறக்கிறது.

வட்டுக்கோட்டைப் பிரகடனத்தைக் கொண்டுவந்து புலிகள் அமைப்பு உருவாவதற்கு முன்னோடிகளாக இருந்த த.வி.கூட்டணி, தற்போது புலிகளுக்குக் கீழ்ப்படிந்து செயற்படுவதற்குக் காரணம் புலிகளை எதிர்த்தால் மரணம் உறுதி என்பதாலேயே ஆகும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கார் விற்பனைக்கு

ஆசிரியரின் தனிப்பாவனையிலுள்ள 3ஸ்ரீ தொடர் இலக்கமுடைய VOLKS WAGON கார் விற்பனைக்குண்டு. தொடர்பு:-திரு.ம.புஸ்பராசா, 14,குறோசெற் ஒழுங்கை, (கச்சேரி-நல்லூர் றோட் அருகில்) நல்லூர் தெற்கு,யாழ்ப்பாணம். (90500)

## படிவம்

வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச சேவையின் கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கான படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன், மானிப்பாய். (90599)

## வீடுவளவு விற்பனைக்கு

உரும்பிராய் மேற்கு, சந்திரோதய வித்தியாசாலைக்கு இரண்டாவது காணியான எட்டுப் பரப்பும் வீடும், பயன்தரு விருட்சங்கள் அடங்கிய எனது காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பா.பகவதி, மே/பா மு. உருத்திரன், 802, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
T.P. No. - 2732 (90645)

## வீடு விற்பனைக்கு

ஏகாம்பரம் கந்தசாமி என்பவருககுச் சொந்தமான 10பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-ஏ.கந்தசாமி, அடைக்கலம் தோட்டவீதி, வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை (மாவடி சந்திக்கு அருகில்) (90660)

## காணவில்லை

கன்னிப்பசு - மண்ணிறம், வால் கறுப்பு, கழுத்தில் கயிற்றுடன் கடந்த வியாழன் முதல் காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். திரு.N. டேவிட் 452, பிரதான வீதி, சுண்டுக்குளி. (90660)

## படிவங்கள்

கூட்டுறவுப் பரிசோதகர், நிலஅளவையாளர், எழுதுநர், கணக்குப் பதியுநர், பண்டகசாலைக் காப்பாளர் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன. விண்ணப்ப முடிவு திகதி: 27.08.2001 பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/17649)

## தவறிவிட்டது

சி.சர்மிளா என்பவருடைய விசேட அடையாளஅட்டை (இல.090401718) யும், பாடசாலை அடையாள அட்டையும் சித்தண்கேணிக்கும் வழக்கம்பரைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் செ.சிவலிங்கம், டச் றோட், சித்தங்கேணி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (90648)

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் எனும முகவரியைச் சேர்ந்த வடிவேலு வள்ளியம்மை என்பவரது தேசிய அடையாள அட்டை (456070272V), வி. அடையாள அட்டை (091012725) என்பன யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அருகில் தவறிவிட்டன. கணடெடுத்தவர்கள் ஞானா சாரியார் முகாம், துன்னாலை மேற்கு, கரவெட்டி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (90667)

இராமநாதன் கபீரதன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.090407532) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வழக்கம்பரை, தொல்புரம், சுழிபுரம் என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (90671)

## விற்பனைக்கு

BLACK STONE எஞ்சின் H.P 26 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சிவம், சங்கரத்தைச் சந்தி, (அம்பாள இரும்பகத்துக்கு அருகில்) (90630)

SONY TV 2020, 2030, 2032 உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.59, சிவன்புது வீதி, நல்லூர். (90658)

வேள்விக்கு வளர்க்கும் பெரிய இன ஜமுனாபாரி இரண்டு கடாக்குட்டிகளும் பால் தந்து கொண்டிருக்கும் தாய் ஆடும் கோழிக்கூடுகளும் உடன விற்பனைக்குண்டு. தொடர்பு:-சனி, ஞாயிறு. இல.75,செட்டித்தெரு, நல்லூர். (90502)

HONDA - JAPAN 2600 W புதிய ஜெனரேற்றர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- மு.யோகராஜா, இருபாலைச சந்தி. (90670)

## ENGLISH CLASSES

G.C.E. A/L 2003 ஆங்கில வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம். G.C.E. O/L ஆங்கிலம் மீட்டல் வகுப்புகள் (பழைய பாடத்திட்டம்) 2001, பாடசாலைகளில் கற்பித்த அனுபவமுள்ள ஆசிரியர்: திரு.J. அரியரத்தினம்16, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி. (90668)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ.350/=) தொடர்பு: பாரதி, 430,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி இல. 3081. (C-17642)

## மணமகள் தேவை

பொறியியலாளர், கணக்காளர் உள்நாட்டு வெளிநாட்டு மணமகன்மாருக்கு B.Sc., B.Com. படித்த மணப்பெண்கள் தேவை. தொடர்பு:- முருகன திருமண சேவை, செ.விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய் (ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடி) (90644)

## மணமக்கள் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன்மாருக்கு மணமக்கள் தேவை. 30வயதுக்குட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. விரும்புவோர் முழுப்போட்டோ, குறிப்புகளுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: நாகலிங்கம் கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (90477)

## ஒரு காதலின் கதை

40 ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணத்தைப் பார்க்க வேண்டுமா? அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை ஒரு கொழும்பு வாரமலரில் எழுதும் தொடர்கதையின் இந்தவார கதையை வாசித்துப்பாருங்கள் (90673)

---

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் நடத்தும்

## வருடாந்த நற்செய்திப் பெருவிழா 2001

காலம்: ஒகஸ்ட் 2,3,4ஆம் திகதிகளில்
மாலை 4.00 - 4.30 உற்சாகமூட்டும் பாடல்கள்
மாலை 4.30 - 5.30 அருளுரை
மாலை 5.30 - 6.00 ஜெபநேரம்
ஒகஸ்ட் 3,4ஆம் திகதிகளில்
காலை 9.00 - 10.00 புதியபாடல்கள்
காலை 10.00 - 11.00 வேதப் படிப்பு

இடம்: யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள யாழ்ப்பாணக்கல்லூரி ஆயர் குலேந்திரன் மண்டபம்.

அருளுரையாளர்:-
அருட்திரு.எம்.கருணாகரன
*(விரிவுரையாளர், தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை)*

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்!

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்.
*(ஸ்தாபிதம் 1907)*
(90519)

---

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.மாவட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளை வட கிழக்கு மாகாணப் போட்டிகளில் பங்கு பற்றுவதற் கான பிரயாண ஒழுங்குகள், சத்துணவு, சீருடை என்ப வற்றை வழங்கி, மேற்படி போட்டிகளில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி சாதனைகள் புரிவதற்குச் சந் தர்ப்பம் அளித்தவர்களான



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு அமைச்சர்
**K.N. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும,



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்,



நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் உயர்திரு.
**க.மணிபல்லவராஜன**
(நிசாந்தன்) J.P.U.M.
அவர்களையும்

இத்துடன் எமக்குப் பல வழிகளிலும் வேண்டிய உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய அரசாங்க அதிபர் உயர்திரு.க.சண்முகநாதன் அவர்களையும், மேலதிக அரசாங்க அதிபர் உயர்திரு.து.வைத்திலிங்கம் அவர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாவட்ட வி.அதிகாரி,
பிரதேச வி.உத்தியோகத்தர்கள்,
மாவட்ட வீர வீராங்கனைகள்.
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
(90652)

---

# கண்ணீர் அஞ்சலி

காரைநகர் நாதஸ்வர வித்துவான்

## N.K.கணேசன்

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆஸ்தான வித்துவான், நாதஸ்வர மேதை, கானவாரிதி **N.K.கணேசன** அவர்களின் மறைவையொட்டி எங்கள் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்,
ப.நோ.கூ.சங்கம்,
*காரைநகர்.*
(C/17654)

---

# அந்தியேட்டிக் கிரியைகள்



தோற்றம் 05 - 12 - 1927
மறைவு 02 - 07 - 2001

அமரர்
## சின்னத்துரை இராஜேந்திரம்

பத்தமேனி, யூனியன் வளவை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை இராஜேந்திரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01-08-2001) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும் என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*யூனியன் வளவு,*
*பத்தமேனி,*
*அச்சுவேலி.*
(90681)

தகவல்:
ப.லோகநாதன (பெறாமகள்)
(மின்சாரசபை, சுன்னாகம்).

---

உ
விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 14 - 01 - 1927
உதிர்வு 03 - 07 - 2001

## அமரர் பொன். சோமசுந்தரு

எம் குடும்ப விளக்கே அப்பா!
நோயில் நொந்து மனம் வாடாமல்
மின்னலென நீர் மறைந்து மீளாத்துயர் எமக்குத் தந்தீரே!
"ஓ"வென்று நாமலற ஓடி மறைந்தீரே நம் கண்முன்னே!
விம்மி வெடிக்கும் எம் வேதனை புரியவில்லையோ?
விடைபெறாமல் சென்றதுதான் சரியோ?
மாளாது நம் துயர் நம் உயிர் மாளுமட்டும்!

*என்றும் உங்கள் நினைவுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (01-08-2001) புதன்கிழமை முற்பகல் உடுப்பிட்டியிலுள்ள அன்னாரது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்து மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் வேண்டுகின்றோம்.

*"அன்னபூரணி இல்லம்"*
*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*
(90650)

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# விமானப்படை உயர்மட்டத்தில் விரைவில் பெரும் மாற்றங்கள்

## கட்டுநாயக்க தாக்குதலின் எதிரொலி

கொழும்பு, ஒக. 1

இலங்கை விமானப் படையின் முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்கள் விரைவில் மாற்றப்படக்கூடும் என்று அரச சார்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீதான தாக்குதலை அடுத்து, பாதுகாப்புக் குறைபாடுகள் தொடர்பாக ஆராய என அரசு நியமித்திருக்கும் 6 பேர் அடங்கிய குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இந்த மாற்றங்கள் நிகழவுள்ளதாகக் கூறப்படுகிறது.

நான்கு வாரங்களில் மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று விமானப் படையின் செய்தித் தொடர்பாளர் விங் கொமாண்டர் அஜித் விஜேசந்திர தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் —

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்புப் பிரிவுத் தலைவராக விங் கொமாண்டர் அஜித் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலையடுத்து கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான இரு உயர் அதிகாரிகள் அவர்களது பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு, புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

பாதுகாப்புக் குறைபாடுகள் தொடர்பான விசாரணைகள் சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்தவே இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாக விமானப் படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

நூற்றியைம்பது பேர் அடங்கிய ஆறு குழுக்கள் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ம-ஓ-6)

# தந்திரதேவா சுவாமி இன்று தீவுப்பகுதிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஒக. 1

யாழ்ப்பாணத்துக்குவருகை தந்துள்ள இந்து சமயத்துறவியான ஸ்ரீமத் தந்திரதேவ மகராஜ் சுவாமிகள் இன்று தீவுப்பகுதிக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

இன்றுகாலை 8-30மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்குச் செல்லும் சுவாமிகள் அங்கு இடம் பெறும் வரவேற்பில் கலந்து கொண்டு பின்னர் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

அதைத்தொடர்ந்து நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்குச் செல்லும் சுவாமிகள், பின்னர் ஊர்காவற்றுறை புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் ஆலயத்துக்கு செல்வார். அதைத் தொடர்ந்து தீவுப் பகுதியில் உள்ள ஏனைய சில ஆலயங்களுக்கும் அவர் விஜயம் மேற்கொள்ள இருக்கிறார்.

நாளை கொழும்பு திரும்பவிருக்கும் சுவாமிகள் காலை 8 மணிக்கு ஆரியகுளம் நாகவிகாரைக்குச் செல்வார். அதன் பின்னர் நல்லை ஆதீனத்தில் சகல சமயப் பிரதிநிதிகள் அளிக்கும் பிரியாவிடை நிகழ்வில் பங்குபற்றுவார்.

(க-3)

# மணீஸ் வெளியீடு!

தரம் 5 மாணவர்களுக்கான
புலமைப் பரிசில்
முன்மாதிரிப் போட்டிப் பரீட்சை 2001

இந்த ஆண்டுக்கான
இறுதிப் போட்டிப் பரீட்சை இல. 4
**04-08-2001 அன்று காலை 9 மணிக்கு**

**சதாபொன்ஸ்** — அல்வாய்.
**கேம்பிறிஜ்** — நவிண்டில்.
**டால்ரன்** — துன்னாலை
**கலைவாணி** — கரவெட்டி

ஆகிய கல்வி நிலையங்களில் நடைபெறும்.

போட்டிப் பரீட்சைக்கு தகுதிபெற்ற சகலரும் பங்குபற்றலாம்.

**பரீட்சைக் கட்டணம் ரூபா 20/-**

விவரங்களுக்கு:

**மணீஸ் வெளியீடு**
சதாபொன்ஸ், அல்வாய்.

(சி-17669)

# இதயம் கனிந்த அஞ்சலி

எமது பாடசாலையை வளம் படுத்திய அயர்லாந்து நாட்டைச் சார்ந்த அதிபர்களுள் 1951—1970 வரையான காலப்பகுதியில் எமது கல்லூரி உன்னத வளர்ச்சியடையக் காரணமாக இருந்தவரான

**Rev. Mother Josephine Tynan**

அவர்கள் 29—07—2001 இல் அயர்லாந்தில் காலமாகிவிட்டார். அன்னாருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது ஆத்ம சாந்திக்காக இன்று (01-08-2001) புதன்கிழமை காலை 9-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

—அதிபர், பாடசாலைச் சமூகம்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.

(சி/17655)

# இதய அஞ்சலி

தமிழ்கூறும் நல்லுலகைத் தன் இசையால் மயக்கிய காரை மாதா பெற்றெடுத்த தவப்புதல்வன்

இசைநாதமணி, இசைச் சக்கரவர்த்தி

**என். கே. கணேசனின்**

மறைவு கேட்டு அதிர்ச்சியுற்றோம், அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினர், நண்பர்கள், ரசிகர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தி அடையச் சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

- காரைநகர் கம்பன் கழகம்.

(சி/17663)

## திருப்பலி

யாழ்ப்பாணம், ஒக. 1

குடத்தனை சம்பேதுருவானவர் ஆலய திருவிழா திருப்பலி இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு அருட்தந்தை எம். ஞானரட்ணம் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து சம்பேதுருவானவரின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

(ம-6)

## கூட்டம்

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் உடற்கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை காலை 9.30மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது என்று வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(-3)

# மொரட்டுவ பல்கலையில் புதிய கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஒக. 1

மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடிவமைப்பு (புடைவை மற்றும் ஆடை)பட்டப்படிப்பு பாடநெறி, பி. எஸ். சி. தொகை மதிப்பீடு (கட்டடப் பொருளியல்) பட்டப்படிப்பு பாடநெறி ஆகியவை இந்த ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடநெறிகளுக்கு இம் மாதம் 10 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடநெறிகள் தொடர்பான விவரங்களை அலுவலக நேரத்தில் கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ் ஸ்பொட்'டில் பார்வையிடலாம்.

(க-3)

# சமய சந்நிதிகளில்

கோப்பாய் பலாலை கண்ணகை அம்பாள் கோயில் தேர்உற்சவம்நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்த உற்சவம் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ம-72)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் நாளை மறுதினம் வரலட்சுமி விசேட பூசையும், காப்புக் கட்டலும் நடைபெறவுள்ளன.

காலை 10 மணிக்குஆரம்பமாகும் இவ்விசேட பூசையைத் தொடர்ந்து இடம்பெறும் வழிபாட்டினை அடுத்து, நோன்புநோற்றவர்களுக்கான நூல் கட்டல் நடைபெறும். (ம-15)

ஏழாலை களவாவோடை

## ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

# வரலஷ்மி நோன்பு

எதிர்வரும் 03-08.2001 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பூஜையும், வ. குமாரசாமி ஐயா அவர்களின் சொற்பொழிவும் காப்பு வழங்கலும் இடம்பெற்று அன்னை வீதியுலா வந்ததும் அடியார்களுககு பிரசாதம் வழங்கப்படும்.

தேவஸ்தானம்.

(சி/ 17665)

# மரண அறிவித்தல்கள்

## சின்னக்குட்டி கந்தையா

வரணி, கரம்பைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி கந்தையா (கணபதிப்பிள்ளை) அவர்கள் 30 - 07 - 2001 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் திரு. திருமதி சின்னக்குட்டி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், திரு. திருமதி மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவபாதம் (விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. பலாலி), இராஜேஸ்வரி (கனடா), இராஜேந்திரன் (கொழும்பு) இரஞ்சினிதேவி (கிராம அலுவலர், வரணி), கலாநிதி (கொழும்பு), பரமேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரி (கனடா), தயாபரன் (சுவிஸ்), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்வேஸ்வரி (கொழும்பு), இராமநாதன் (கனடா), ஜெயலட்சுமி (Registrar, General office, கொழும்பு-3), மனோகரன் (கனடா), சோதிலிங்கம் (கனடா), முத்துக்குமாரசாமி (கனடா), கௌரி (கனடா), சுமதி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்மினி, சுகந்தன், கிருபா, ஜனகன், வைதேகி, கோபிகா, சிந்துஜன், யதுர்ஷன், சாமினி, அனந்தினி. மயூரினி, தக்ஷாயினி, நிஷாந்தன், நிஷானி, விஸ்ணுகோபன், நிதர்ஷன், தாரணி, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (01-08-2001) பிற்பகல் 1.00 மணியளவில் 46, Moor Road Wellawatta இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ம. சாமினி**
(பேர்த்தி)

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(90693)

## செல்வி மேரி யோசவின் அருளப்பு
### (பொன்றோஸ்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை, இளவாலை)

உடையார் வீதி, இளவாலையைச் சொந்த இடமாகவும் நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்வி மேரி யோசவின் அருளப்பு (ஆசிரியை) 30—07—2001 இல் நீர்கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளவாலை சித்த ஆயுர்வேத வைத்தியர் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை அருளப்பு விக்ரோறியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருமதி செசிலியா — அந்தோனிப்பிள்ளை, திருமதி அல்பீனம்மா — மனுவேற்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற ஏ. ஜே. அல்போன்சஸ் (முன்னாள் அதிபர் - மாரீசன்கூடல் ஆர். சி. வித்தியாலயம்), காலஞ்சென்ற அருட்சகோதரி செ‌ன். ஜெறோம் (திருக்குடும்ப கன்னியர்மடம்), திருமதி ராணி மேரிதிரேஸ் — மனுவேற்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி பொலின்றோசா—சுவாம்பிள்ளை, திருமதி மேரிறோஸ்விந்தா—யேசுதாசன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (01—08—2001) புதன்கிழமை மாலை 4-00 மணியளவில் நீர்கொழும்பு கொச்சிக்கடை புனித பிலிப்நேரியார் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**திருமதி ராணிமேரிதிரேஸ் மனுவேற்பிள்ளை**
(சகோதரி)

அன்மதனை,
இளவாலை.

(சி/17662)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய புனரமைப்புக்காக ஒரு லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி அதில் 50 ஆயிரம் ரூபா நிதியை உடன் வழங்கி உதவியமைக்காக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து சமய கலாசார அமைச்சரும் - ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான



**திரு.ந.திரிலோகநாதன்**
அவர்களையும்

நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலன சபையினர்.

(90685)

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்

*அருள்மிகு ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்*
**சுழிபுரம் மேற்கு**

எமது ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டு ஆலய புனரமைப்புக்கு நிதி உதவி வழங்கிய



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்துசமய கலாசார அமைச்சர்

மாண்புமிகு
**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்,



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான
**உயர்திரு.கே.வி.குகேந்திரன்**
(ஜெகன்) அவர்களுக்கும்,

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பாளரும் அதன் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும் வலி. மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபை போசகருமாகிய உயர்திரு



**ந.திரிலோகநாதன்** (லோகன்)
J.P.U.M. அவர்களுக்கும்

ஆலய வழிபடுவோர் சார்பில் எமது பாராட்டுக்களையும் உள்ளம் கனிந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.*
(90679) - ஆலய பரிபாலன சபை.

## நிலாக்கால நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஓக.1

தென்னிந்தியத் திருச்சபையின் கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள வளாகத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் நிலாக்கால நிகழ்ச்சியில ஜெ.சி.ஜெயசீலன் 'தமிழ் - சொல்லும் சுவையும்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

(உ-3)

## கொழும்பு...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க இராஜாங்க அமைச்சைச் சேர்ந்த அதிகாரியான ஜெனரல் ஹென்றி ஷெல்டன் கடந்தவாரம் புதுடில்லி சென்றிருந்தார். பிராந்தியப் பாதுகாப்புத் தொடர்பாகக் கலந்துரையாட வந்தார் எனக் கூறப்பட்ட போதிலும், அவரது முக்கிய நோக்கம் இந்தியாவில் உள்ள மிசோராம் பகுதியில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற காட்டு யுத்தப் பயிற்சிப் பாடசாலையில் அமெரிக்கப் படையினர் பயிற்சி பெறுவதற்கான அனுமதியை இந்திய அரசிடமிருந்து பெறுவதே ஆகும். இந்திய அரசு இதுவரை ஸ்ரீலங்காப் படையினர் அந்தப் பயிற்சிப் பாடசாலையில் பயில்வதற்கான அனுமதியை வழங்கவில்லை. இந்த அமெரிக்க அதிகாரியின் இந்திய விஜயம் குறித்து புலிகளின் சர்வதேசப் பிரிவு இந்நாட்டில் உள்ள புலிகளுக்கு அறிவித்துள்ளது.

அர்த்தமற்ற யுத்தத்தை அரசு நடத்தி வருவதாக ஐ.தே.கட்சி தற்போது குற்றஞ்சாட்டுகிறது. அவ்வாறெனில் 17 ஆண்டுகளாக ஐ.தே. கட்சியும் அர்த்தமற்ற யுத்தத்தையா நடத்தியது? யாழ்.கோட்டையை புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தது - 75 மில்லியன் ரூபாவை புலிகளுக்கு வழங்கியது - 600 பொலிஸாரைப் புலிகளிடம் சரணடையச் செய்தது - யார்? இவற்றுக்கெல்லாம் பொறுப்பாகவிருந்த ஐ.தே.கட்சி தற்போது என்ன கூறுகிறது. ஐ.தே. கட்சியில் உள்ள இளைஞர்கள் கடந்த காலத்தை மறந்துவிட்டனர் போலும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி கொழும்பு நகரில் தமிழர்களும் முஸ்லிம்களுமே கூடுதலாக வாழ்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் காரணத்தாலேயே புலிகளுக்கு கொழும்பு நகரையும் நிர்வகிக்கும் அண்டிய வத்தளை, ஹெந்தளை, நாயககந்த, அலகந்த ஆகிய பகுதிகளில் மட்டும் 60 ஆயிரம் தமிழர்கள் வாழ்கின்றனர். இதனால் கொழும்பு நகரம் மற்றும் அண்டியுள்ள பிரதேசங்கள் எதிர்காலத்தில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக நேரிடலாம் என்ற சந்தேகம் உருவாகியுள்ளது.

யுத்தத்தை அரசியலாக்குகிறார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டதால் யுத்த நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியிருந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை மீண்டும் யுத்த நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளதைத் தொடர்ந்து, வெளிநாட்டுப் பணத்தில் சுகபோகம் அனுபவிப்போரின் எண்ணம் சுக்குநூறாகிவிட்டது. அரசியல் தலைமை இல்லாத காரணத்தாலேயே "அக்கினிச் சுவாலை" நடவடிக்கை தோன்றியுள்ளது. ☆

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறைத் தலைவருமான
**கலாநிதி**
**சபா. ஜெயராசா**
அவர்கள்

பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். எமது நல்லாசானாகிய இவர், பல்லாண்டு காலம் நீடூழி வாழ சோமாஸ்கந்தப் பெருமானை வேண்டுகின்றோம்.

இவரது வழிகாட்டலில் வளம் பெற்ற
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி சமூகத்தினர்,
*புத்தூர்.*

(90691)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் ஆலயம்**
**2ஆம் வட்டாரம், சரவணை மேற்கு , வேலணை**

மேற்படி ஆலயத்தைப் புனரமைப்பதற்கு ரூபா ஐந்து லட்சம் நிதியை ஒதுக்கி, அதில் இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா நிதியை உடன் வழங்கியுதவிய



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து சமய கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்
**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்,



எமது ஆலய வளர்ச்சியில் பெரிதும் உதவுகின்ற ஈ.பி.டி.பி.யின் தீவக அமைப்பாளரும், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான
**உயர்திரு.ந.மதனராசா (மனோ)**
அவர்களையும்,



ஈ.பி.டி.பியின் வேலணை அமைப்பாளரும், வேலணை பிரதேச சபைத்தலைவருமான
**உயர்திரு.ந.கருணாகரகுருமூர்த்தி**
அவர்களையும்,

ஸ்ரீசெல்வக்கதிர்காம முருகனின் நல்லருள் என்றும் கிடைப்பதாக என மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*2ஆம் வட்டாரம்,*
*சரவணை மேற்கு,*
*வேலணை.*
பரிபாலனசபை
ஸ்ரீசெல்வக் கதிர்காம முருகன் ஆலயம்

(90686)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக விரிவுரையாளர் திரு.க.சிவபாதம் அவர்களின் அன்புத் தந்தையார்
**சி.கந்தையா**
அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

விரிவுரையாளர், நண்பர்கள்,
*பலாலி ஆசிரிய கலாசாலை.*

(C/17653)

## வாழ்த்துகின்றோம்

**செல்வி தயாளினி செல்வராஜா**

**(யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)**

எமது மாணவி **செல்வி தயாளினி செல்வராஜா** மாகாண மட்டப் போட்டிகளின் 21 வயதுப் பிரிவில் 200 மீ., 400 மீ. உயரம் பாய்தல் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்று, சிறந்த வீராங்கனைக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டதுடன், உயரம் பாய்தலில் 1.32 மீ. சாதனையை முறியடித்து 1.40 மீற்றரில் சாதனையையும் நிலைநாட்டியுள்ளார்.

இவர் 1999 ஆம் ஆண்டு மாகாண மட்ட வலைப்பந்தாட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற, எமது 19 வயது அணியில் சிறப்பாக விளையாடியதோடு, மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் 200 மீ., 400 மீ. போட்டிகளிலும் முதலிடத்தைத் தட்டிக்கொண்டவராவார்.


இவரை நாம் வாழ்த்துவதோடு தேசியப் போட்டியிலும் சிறப்பு வெற்றி பெற்று, கல்லூரிக்கும் வலயத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,
*பருத்தித்துறை.*

(C/17652)

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்**

We Serve





**மானிப்பாய் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்**
**அனுசரணையுடன் நடத்தும்**
*விழிவெண்படலத்தால் (கற்றாக்) பாதிப்புற்றோருக்கான*

## ☆ இலவச கண்பரிசோதனை முகாம் ☆

*காலம்:-* 03-08-2001(வெள்ளி - போயா தினம்) காலை 8 மணி
*இடம்:-* சென்பீற்றஸ் பாடசாலை, நவாலி தெற்கு, மானிப்பாய் (பிரசித்தி பெற்ற சென்பீற்றஸ் தேவாலயம் அருகில்)

**கண்பரிசோதனை மேற்கொள்பவர்:**
யாழ்.போதனா வைத்தியசாலை - கண்சத்திர சிகிச்சை நிபுணர்
**வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் அவர்கள்.**

முகாமிற்கு வருகை தரும் ஒழுங்கின்படி குறிப்பிட்ட தொகையினரையே பரிசோதனை செய்யமுடியுமாதலால் நேரத்திற்கு வருகை தரவும். யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன், தேவைப்படின் வசதியற்றோருக்கு மட்டும் கண்ணாடி வில்லையும் பெற்றுத்தரப்படும்.

*குறிப்பு:- நலிவுற்ற முதியோருக்கும் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.*

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா,
சேவைத்திட்ட தலைவர்.

(C/17651)

லயன் வைத்திய கலாநிதி
நவமலர் கனகரத்தினம்
கழகத்தலைவர்.

## புறநிலைப் படிப்புகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## EXTRA MURAL STUDIES UNIT
## UNIVERSITY OF JAFFNA

**2001/2002 கல்வியாண்டுக்கான அடிப்படைக் கற்கைநெறிகள்**
Foundation Courses for the academic year 2001/2002

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் அடிப்படைக் கற்கைநெறிகளை 2001/2002 கல்வியாண்டில் நடத்தவுள்ளது. இவை சனி, ஞாயிறு தினங்களில் மு.ப. 9.00 மணி முதல் 12.00 மணிவரை பல்கலைக்கழகத்தில் இடம்பெறும். இக் கற்கை நெறிகளைப் பயில சான்றிதழ்கள் எதுவும் தேவையில்லை. ஆர்வமே தகுதியாகக் கொள்ளப்படும். 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரங்களைக் கொண்ட விண்ணப்பப்படிவம் மூலம் அடிப்படைக் கற்கைநெறியின் தலைப்பைக் குறிப்பிட்டு தனித்தனியாக விண்ணப்பிக்கலாம். ஒருவர் எததனை கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். ஒரே நேரத்தில் ஒரு கற்கைநெறியைப் பயில மாத்திரம் அனுமதிக்கப்படுவர். குறித்தவொரு கற்கைநெறிக்குப் போதியளவு விண்ணப்பங்கள் கிடைககப்பெறுமிடத்தே கற்பித்தல் இடம்பெறும். அடிப்படைக் கற்கைநெறி ஒன்று குறைந்தது 40 மணித்தியாலக் கற்கைக் காலத்தைக் கொணடது. பதிவுக் கட்டணமாக ரூபா 200 செலுத்துதல் வேண்டும்.

**அடிப்படைக் கற்கை நெறிகள் பின்வருமாறு:**

1. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (அடிப்படை)
   English for Communication (Basic)
2. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (உயர்தரம்)
   English for Communication (Advanced)
3. அலுவலகத்தில் பணிபுரிவோருக்கான ஆங்கிலம்
   English for office Staff
4. முன்பள்ளிக் கல்விக்கான ஆங்கிலம்
   English for pre - school Education
5. முன்பள்ளிக் கல்வி
   Pre - School Education
6. மனித உரிமைகள்
   Human Rights
7. பெண்களும் அபிவிருத்தியும்
   Women & Development
8. இளைஞரும் அபிவிருத்தியும்
   Youth & Development
9. குழந்தைகளும் அபிவிருத்தியும்
   Children & Development
10. புவிக்கோளமயமாக்கலும் அபிவிருத்தியும்
    Globalization & Development
11. கலாசாரமும் அபிவிருத்தியும்
    Culture & Development
12. பேண்தகு அபிவிருத்தி
    Sustainable Development
13. அலுவலக முகாமைத்துவம்
    Office Management
14. இதழியல்
    Journalisam
15. விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு
    Increasing Agricultural Productivity
16. உணவகங்களின் முகாமைத்துவம்
    Management of Restaurants
17. தாதிப்பராமரிப்பும் முதலுதவியும்
    Nursing & First Aid
18. விலங்கு வளர்ப்பு, கோழி வளர்ப்பு அபிவிருத்தி
    Animal husbandry, Poultry Development
19. மொழிபெயர்ப்புக் கலை
    Art of Translation
20. நூலகவியல்
    Library Science

**புலமை சான்றோர்** (Resource Person)

மேற்படி தலைப்புகளில் நடைபெறவுள்ள கற்கைநெறிகளில் புலமை சான்றோராகப் பணியாற்ற விருப்பமும் தகுதியுமுள்ள பல்கலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள புலமை சான்றோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்கள் துறைசார் தகைமையை உறுதிப்படுத்தக கூடிய வகையிலமைந்த சுயவிவரத் தரவை (Bio Data) இணைத்து புறநிலைப் படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கவும்.

புறநிலைப் படிப்புகள் அலகு,
*யாழ்.பல்கலைக்கழகம்.* - **இணைப்பாளர்.**

(C/17641)

## 'அன்னசத்திரம்' திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.1

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 'அன்னசத்திர'த்தை (அன்னதான மடம்) எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்துவைப்பார்.

இந்நிகழ்வில் துர்க்காபுர மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை பாராயணமும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் சிறப்புரையும் இடம் பெறவுள்ளன. (க-9)

## அவசரமாக இரத்தம் தேவை

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்.வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'ஓ' நெகட்டிவ் 'பி' நெகட்டிவ் இரத்தம் அவசரமாகத தேவைப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரக இரத்தத்தைத் தானம் செய்ய விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-3)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.1

திருநெல்வேலி முத்துத்தம்பி வித் தியாலயத்தில் தற்காலிகமாக இயங் கிவரும் பலாலி ஆசிரியர் கலாசாலையை வலி.வடக்கில் தனியார் கட்டடங்களில் இயங்க வைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் -

இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலி.வடக்குப் பிரதேச செயலர் திருமதி தி.பத்தினியம்மா தலைமையில் வலி.வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-6)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.1

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று அதிகாலை 5மணிக்கு திருமுறை வீதி பஜனையும் அதைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு குரு மூர்த்த ஆலயத்தில் விசேட பூஜை ஆராதனை வழிபாடுகளின் பின்னர் 'கந்த புராணம்' புராணபடனமும் இடம் பெறும்.

★ ★ ★

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மகேஸ்வரி சுப்பிரமணியத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

★ ★ ★

கம்பன் கோட்டத்தில் தினமும் மாலை 6மணி முதல் 7மணிவரை அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தி வரும் சமயச் சொற்பொழிவுத்தொடரில் இன்று செஞ்சொற்செல்வர் இரா. செல்வவடிவேல் கந்தபுராணச் சொற்பொழிவை நிகழ்தத‌வுள்ளார்.


**விற்பனைக்குண்டு**

புதிய மொடல் SUZUKI - GS.125 (சில்வர் சைலென்சர்) RED கலர், YAMAHA NEWS MATE - 50 (YCLS), HONDA, SUPER CUB-50 LANCER (செல்ஸ் ராட்மொடல்) மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு:
கண்ணன் மோட்டோர்ஸ்,
இல.79, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக)
T.P No.-2312
(90665)

**ராஜா** யாழ்ப்பாணம்
இளையதளபதி விஜய், தேவயாணி, சூர்யா, வடிவேலு
*மற்றும் பலர் நடிப்பில*
**ப்ரண்ட்ஸ்**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C/17743)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அஜித்
(மாறுபட்ட 7வேடங்களில்)
வசுந்துராதாஸ், மீனா நடித்த
**சிட்டிசன்**
(ரீல்ஸ்) (90687)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அச்சுவேலி வடக்கு, சரசாளி சித்திரவேலாயுதர் தேவஸ்தானம்**

**எமது ஆலயப் புனரமைப்புக்கு ரூபா ஒன்றரை லட்சம் நிதியை ஒதுக்கீடு செய்து அதில் ரூபா எழுபத்து ஐயாயிரத்தை உடன் வழங்கியுதவியமைக்காக**



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கௌரவ

**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களையும்



வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் உயர்திரு.

**பூ.குணசிங்கம்** - J.P.U.M.

அவர்களையும்



வலி.கிழக்கு பிரதேச சபை உப தலைவரும், வலி.கிழக்கு பிரதேச ஈ.பி.டி.பி.அமைப்பாளருமாகிய உயர்திரு.

**U.L.A.ரவி**

அவர்களையும்

*நன்றியுடன் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

**தர்மகர்த்தா,**
**சரசாளி சித்தி வேலாயுதர் தேவஸ்தானம்,**
**அச்சுவேலி வடக்கு.**

(90690)

## ஐந்தாம் ஆண்டு அணையாத தீபம்

மலர்வு 26 - 03 - 1989



உதிர்வு 01 - 08 - 1996

### யோ.தினேஷா

(2ஆம் ஆண்டு மாணவி, நல்லூர் காசிப்பிள்ளை மகாவித்தியாலயம்)

*அழகிய மலருக்கு அழுத விழிகளுடன்!*

ஆவணி மாதம் முதலாம் திகதி அதிகாலை நான்கு மணிக்கு உனது ஆத்மா அந்தரத்தில்; மகளே! இன்னும் உன் பிரிவை உணரவே முடியவில்லை. உன் இனிய குரல் எம் காதுகளுக்கு எட்டவே முடியாத அத்தனை தூரத்தில் நீ போய் விட்டாயம்மா! பண்பைக் குழைத்துச் சரிபாதி மனிதம் இட்டு அன்பில் வடித்த அற்புதமே! உன் என்பும் பிறர்க்கென்று வாழ்ந்த பெருமகளே! எப்பொழுதும் எங்களுக்காய் எறித்த முழு நிலவை இப்பொழுது இங்கே இருள் சூழ்ந்து போனதம்மா! காணுகின்ற பொழுதெல்லாம் மலர்ந்திருந்த கமலமுகம் கண்ணெதிரே இப்போது கருகிப் போய்க்கிடக்கிறதம்மா! நல்லதொரு மகளாய், தாயாய், இனியதோர் இரண்டாவது மகளாய், பண்பிலே தெய்வமாய், பாசமிகு மானிடராய், இதயமெல்லாம் நிறைந்த இனிய தினேஷா! இருப்பிழந்து எங்கே எம்மை விட்டுப் போகின்றீர்? நலங்கெடப் புழுதியில் நாம் கொண்டு போய்ப் புதைப்போமோ? பூபாளம் ஒன்று முகாரியில் முடிவதுவோ? பாதம் பணிந்து தொட்டு உன் முன் நிற்கின்றேன் சென்று வருக எங்கள் சிந்தைக் குடியிருப்பே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*சோ.யோகராசா,*
*தினேஷா பாடசாலை சேவை,*
*அரச வீதி,*
*நல்லூர்.*

என்றும் உன் நினைவில் வாடி நிற்கும்
**அப்பா, அம்மா,**
**அண்ணா, தம்பிமார்,**
**பாசமிகு தங்கை.**

(90692)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் பிரதி அதிபர்
திரு.க.சிவபாதம் அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னக்குட்டி கந்தையா

அவர்கள் 30.07.2001 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மாணவர் ஒன்றியம்,*
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.

(90695)


**செல்லா** இணுவில்
இன்று முதல் குதாகல ஆரம்பம்
M.G.R, லதா, நாகேஷ்
மற்றும் பலர் நடிப்பில்
**உரிமைக்குரல்**
தினசரி 10.30, 2.00, 5.60



(90664)

### எதிர்வரும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில்

# மனித உரிமை மீறல்கள் குறித்து சந்திரிகாவிடமே நேரடி பிரஸ்தாபம்

லண்டன்,ஒக.1

ஆஸ்திரேலியாவின் தலைநகர் மெல்போர்னில் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மாநாட்டில் ஸ்ரீலங்காவில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து பிரஸ்தாபிக்கப்படவிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேரடியாக இந்த விடயத்தைப் பிரஸ்தாபிக்கப் போவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்காவிடம் கேள்வி எழுப்புவது போன்று ஸிம்பாப்வே, மலேசியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளிடமும் அந்த நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கேள்வி எழுப்பப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (க-3-9)

### அரசமைப்பை மாற்றும் அரசின் திட்டத்துக்கு

# பௌத்த பீடாதிபதிகளின் உதவியை கோருகின்றார் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு,ஒக.1

சிறுபான்மை மக்களின் உரிமைகளை அரசு உறுதிப்படுத்த வேண்டும். அப்போதுதான் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும். எனவே அரசு அரசமைப்பை மாற்ற எடுக்கும் நடவடிக்கைக்கு பௌத்த பீடங்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பௌத்த பீடாதிபதிகளிடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று பௌத்த மத பீடாதிபதிகளைச் சந்தித்த சமயமே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் பிக்குகளும் தலதாமாளிகை பிக்குகளும் இதில் பங்குபற்றினர்.

கட்டுநாயக்கா விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் குறித்தும் இன்றைய அரசியல் நிலை குறித்தும் ஜனாதிபதி அவர்களிடம் விளக்கிக் கூறினார்.

இன்றுள்ள நிலைமைக்கு தீர்வு காணவும் நாடு இக்கட்டு நிலையில் இருந்து மீளவும் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பௌத்த மத பீடாதிபதிகள் உதவ வேண்டும் என்றும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். (க-3-9)


சுடர் ஒளி

05-08-2001

கறுப்பு ஜூலையில் நெருப்புடன் கட்டுநாயக்காவில் விசேட பூஜை

அதிரடி விசாரணைகளில் சி.ஐ.டி. அதிகாரிகள் பலருக்குக் கல்தா!!

சர்வஜன வாக்கெடுப்பால் உருப்படியான பலன் உண்டா?

எங்கும் செல்வோம்; எதிலும் வெல்வோம் கிழக்கில் விடுத்தது தெற்கில் வெடித்தது.

பலாலி பெரும் தளத்தினுள் புலிகள் ஊடுருவ முயற்சி!

சிவாஜிக்கு நினைவாலயம் தமிழக அரசு அமைக்குமா?

ஆஸ்துமா நோயாளர்களுக்கு அதிக பாதுகாப்பு இன்ஹேலர்

துப்பாக்கி ஏந்தி பழி தீர்த்தவர் துப்பாக்கியால் முடிந்த கதை

மற்றும் பித்தன் பதில்கள், அரசியல் அம்பலம், சிறுகதை, தொடர்கதை, ஆந்தையாரின் 'க்ரைம்' டயறி, விளையாட்டு, சிறுவர் பகுதி, சினிமா உட்பட பல அம்சங்கள் (C/17570)

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே பத்திரிகை



பதவி வெற்றிடம்

பாதுகாப்பு உத்தியோகஸ்தர்

பின்வரும் தகைமைகள் உடையோர் 02.08.2001 வியாழக்கிழமை அன்று பி.ப. 4.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

1. கல்வித்தகைமை :- ஜீ.சீ.ஈ. சாதாரணம்
2. வயது :- 35 முதல் 55 வரை
3. உயரம் :- 5 அடி 4 அங்குலம் (அதற்கு மேலும்)
4. சிறந்த ஒழுக்கம்

ஓய்வுபெற்ற அரசபடை சேவையாளர்களுக்கு (Ex.Service men), பாதுகாப்புச் சேவையில் முன் அனுபவமுள்ளோருக்கு வயதெல்லை கட்டுப்பாட்டிலிருந்து விலக்கப்படும்.

கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை,
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/17660)


### விமான கட்டணங்கள் அதிகரிக்கும்

கட்டுநாயக்கா இழப்புகளைச் சமாளிப்பதற்காக விமானப் போக்குவரத்தின் கட்டணங்கள் அனைத்தும் 10 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளன.

கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து விமானப்படைக்கு மட்டும் 20 வீத சொத்திழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் -

இந்த இழப்பீடு சுமார் 350 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் காப்புறுதி நிறுவனம் ஒன்று மதிப்பீடு செய்துள்ளது.

இந்த நஷ்டத்தின் ஒரு பகுதியை பயணிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே இந்த திட்டத்தை அரசு செயற்படுத்தவுள்ளதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (க-9)

### புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புக்களின் கருத்தொருமைப்பாட்டுடன் புதிய அரசமைப்பை அறிமுகம் செய்வதற்கு அரசு பல தடவைகள் முயற்சி மேற்கொண்டது. நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களால் அந்த முயற்சிகள் குழப்பப்பட்டன.

சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் நேரடி ஆணை கிடைத்ததும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இன்றியே புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்தக் கூடிய முறையை அரசு வகுத்துள்ளது.

யுத்தத்தின் மூல காரணியாக அமைந்திருக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய அரசியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது எமது பொறுப்பு என்பதை உணர்ந்துள்ளோம்.

எனவே சிறுபான்மை, பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சீர்திருத்தங்களைக் கொண்டு வர முடிவு செய்துள்ளோம் என்றார்.

கட்டுநாயக்கா விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்த அனைத்து நாடுகளுக்கும் அரசு சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார். (க-3-9)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

பிரசாந், ஜோதிகா நடித்த

ஸ்டார்

வீடியோ CD வெளியீடு

- நிறம் மாறாத பூக்கள்
- நான் போட்ட சவால்
- நானும் ஒரு பெண்
- அன்னை இல்லம்
- சர்வர் சுந்தரம்
- சரணம் ஐயப்பா
- உயிருள்ளவரை உஷா
- சிவசங்கரி

பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

அல்டி எலக்ரோனிக்ஸ்,
இல.15, ஸ்ரான்லி வீதி,
(C/17666) யாழ்ப்பாணம்.


# கட்டுநாயக்க சம்பவம் தொடர்பாக மேலும் 6பேர் நேற்றுக் கைது

கொழும்பு,ஒக.1

கட்டுநாயக்க விமானத்தளம் மீதான தாக்குதல் தொடர்பாக மேலும் 6 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறணப் பகுதியில் பேக்கறி நடத்திவந்த தமிழரும், அங்கிருந்து விமானத் தளத்துக்கு பாண் விநியோகித்து வந்த அந்த பேக்கறி ஊழியரான தமிழரும் மற்றுமோர் இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை - விடுதலைப் புலிகளுக்கு 'செலூலர்' தொலைபேசிகளை விநியோகித்ததாகச் சந்தேகித்து மூன்று முஸ்லிம்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்று விமானப்படையினர் உட்பட 19 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். தாக்குதல் நடந்த சமயம் விமானப் படைத்தளத்தில் பணிபுரிந்த 350க்கு மேற்பட்ட விமானப்படையினரும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

### நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று அறிவித்து, அதனடிப்படையில் தற்போதைய அரசமைப்பைத் தூக்கி எறிய - அந்த நடைமுறை சட்ட முரணானதாக இருந்தாலும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கங்கணம் கட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தற்போதைய அரசமைப்பை சட்டமுறையற்ற விதத்தில் தூக்கி எறிவது போல - நாடாளுமன்றத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, புதிய அரசமைப்பைத் தம்பாட்டில் பிரகடனப்படுத்துவதில் ஜனாதிபதி முனைப்பாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ)

### அரசுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதாக ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

கட்டுநாயக்கா விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை, இன்றைய அரசியல் நிலைமை ஆகியன தொடர்பாக ஜனாதிபதி விளக்கிக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவும் பங்குபற்றினார்.

ஜே.வி.பி. சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (க-3-9)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

பிரசாந்த், ஜோதிகா

ஸ்டார்

விஷ்ணு வீடியோ கோண்டாவில்

ஸ்ரீ செல்வா சினிமா யாழ்ப்பாணம்

பிரசாந்த், ஜோதிகா நடித்த

ஸ்டார்

புதிய வெளியீடு

10.30, 2.30 (ப. நே.)

(C-17667)



SUBRA (14)

சித்தன்கேணி

2002 A/L

இணைந்த கணிதம்

துரித மீட்டலும்

வினா விடையும்

திரு.A.பத்மநாதன்

ஆரம்பம்:- 03.08.2001

வெள்ளி - 3.00 p.m.

(90603)


### திவ்வியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகப் பொலீஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அந்தக் குண்டை வெடிக்க வைக்கும்படியும் ஏனையவற்றை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பும்படி நீதிவான உத்தரவிட்டார்.

சட்ட மா அதிபரின் அறிவுறுத்தல கிடைக்கும் வரை திவ்வியனை விளக்க மறியலில் வைக்கும்படி அறிவித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

பலத்த பாதுகாப்புடன் திவ்வியன் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டிருந்தார். (க-3-6)

### வெலிக்கந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி வருகின்றனர்.

ஊர்காவலர்கள் மீது முதலில் கிரனேட் தாக்குதலை மேற் கொண்ட விடுதலைப் புலிகளின் அணி பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த ஊர்காவலரின் ஆயுதங்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். (க-3-9)

### ஈ.பி.ஆர்.எல்.எவ்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இரவு ஆஸ்பத்திரிக்குள் பிரவேசித்த இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலை பிஸ்ரல் குழுவே மேற்கொண்டதாக விசேட ஊடகத் தகவல் மையம் தெரிவித்தது. (க-3)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

ஸ்டார்

பிரமிட் வீடியோ CD வெளியீடு

குங்குமப்பொட்டு கவுண்டர்

வீடியோ விமல்

(C/17668) யாழ்ப்பாணம்



புத்தம் புதிய வெளியீடு

பிரசாந்த், ஜோதிகா நடித்த

ஸ்டார்

ஒறிஜினல் CD வெளியீடுகள்

- போக்கிரிராஜா
- நேற்று இன்று நாளை

பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

வீடியோ ஆனந்த் ஸ்ருடியோ

யாழ்.வீதி, மானிப்பாய்.

T.P:2889 (C/17661)



ஆச்சரியம்தான்?

உங்கள் குழந்தைக்கு இன்னும் கணனிக் கல்வியைப் புகட்டாதிருப்பது

குழந்தைகளுக்கான எமது விடுமுறைக்கால கல்வித் திட்டத்தில்

கணனியை இயக்குவதில் சிறப்புப் பயிற்சி

கணனியுடான கற்றல் செயற்பாடு

கணனியுடனான விவேக விளையாட்டு

இவையாவும் விடுமுறைக்காலத்தில் அச்சிடப்பட்ட குறிப்புகள், விளக்கப்படங்களுடன் சிறப்பான ஆசிரியர் குழுவினால் நடாத்தப்படும்.

இன்றே எமது விடுமுறைக்கால கல்வித் திட்டத்தில் உங்கள் வருங்காலங்களை இணையுங்கள்

05-08-2001 ஞாயிறுக்கிழமைக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்

STP Computer World (Pvt.) Limited.

54A, Palaly Road, Kantharmadam, Jaffna

Tel : 2674, E.Mail:stpedu@hotmail.com,


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.